


# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2052 கீழறை ஆண்டு ஆடவை நல்லோரை ஆனித் திங்கள் 10ம் நாள் (24-06-2021) நிறைமதி வெளியீடு +94 21 221 2739


## மணிவாசகர் குருபூசை



ஆனித் திங்கள் 29ம் நாள், கொடுநுகம்/மகம் நாண்மீன் (நட்ச்சத்திரத்தில்) (13 ஜூலை) வாதவூரரின் குருபூசை தென்னாட்டில் கொண்டாடப்படும்.

# பாவங்களை அறுக்கும் பரமனுக்கு கோயில் கட்டுவது, திருப்பணிகள் செய்வது பிறவிப்பிணியை நீக்கும்

**முற்பிறப்பு தொடர் வினைகளையும், இப்பிறப்பின் செய்வினைகளையும் அறுத்து உயிரைத் தூய்மைப்படுத்தி இன்புறச் செய்து, அழகிய வாழ்வினை அள்ளித்தந்து, ஏன் பேரின்பப் பெருவாழ்வையும் தரவல்ல ஒரேயொரு கடவுளாக அருள்மழை பொழிபவர் எங்கள் செந்தமிழ்க்கோன் ஆடல்வல்லான் மட்டுமே.**

**அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பது முந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்**

இது திருநீலகண்டத்தின்மேல் சத்தியம் என்கிறார் தவமுதல்வர் சம்பந்தர் அவர்கள். சிவனை வணங்குவதற்கே சிவனின் திருவருள் வேண்டுமென்று திருவாசகத்தில் **"அவனருளாலே அவன் தாள் வணங்கி"** என்று கூறுகிறார் மணிவாசகர். அப்படி இருக்கையில் சிவனுக்கு கோயில் கட்டுவது, சிவன்கோயில் திருப்பணிகள் செய்வது, இவற்றிற்கு இடமோ, பணமோ, பொருளோ கொடுப்பது என்பது முற்பிறவிச் சிவத்தொடர்பு என்பதையும், இப்பிறவியில் வினைகளை அறுக்க, சிவன் கொடுக்கும் வாய்ப்பு என்பதையும் உணர்பவர்கள் மட்டுமே உய்வடைகிறார்கள். மற்றவர்கள் கைக்கெட்டியது வாய்க்கெட்டாதாது போல் மீண்டும் வினைப்பயனை அனுபவிக்கச் செல்கின்றனர்.

இவ்வாறான சிவப்பணிகளுக்கு உங்களால் இயன்ற உதவிகளைச் செய்வது மற்றும் மற்றவர்களையும் "நீங்கள் பெற்ற இன்பம் பெறுக" என்று செய்விப்பது உங்களை மட்டுமல்ல உங்கள் தலைமுறையினர்களை வையத்துள் வாழ்வாங்கு வாழவைப்பதுடன், உங்கள் முன்னோர்களையும் சிவன்பால் ஆறுதலடைந்து மீண்டும் பிறப்பில்லை பேரினப் பெறுவாழ்வை எய்த வழிவகுக்கும். இது திருநீலகண்டத்தின் மேல் ஆணை.




உலகின் முதல் சிவன்கோயில் உத்தரகோசமங்கை மங்களநாதப் பெருமான் திருக்கோயில் - இராமநாதபுரம்



# சரியை கிரியை யோகம் ஞானத்தில் சிறந்து விளங்கும் பவானி தியாகராஜன் ஐயா

ஒளியகம் சிவத்திரு ந.ரா.ஆடலரசு மற்றும் சிவத்திரு. ந. ஒளியரசு அருட்குருநாதர்களின் மாணவமணிகளில் ஒன்று பவானியில் முத்தாகி ஒளி மல்கிக்கொண்டு இருக்கிறது. சிவத்திரு.பவானி அ.தியாகராஜன் அவர்கள் பவானி சிவனடியார் திருக்கூட்டத்தின் தலைவராக மற்றும் அரன்பணி அறக்கட்டளையின் செயலாளராக தமிழ்நாடு மட்டுமல்ல, உலகெங்கும் செய்துவரும் சைவப்பணிகள் எண்ணிலடங்காதவை. சைவத்தமிழ் மரபில், தமிழ் வழிபாட்டு நெறிமுறைகளை அடுத்த தலைமுறைக்கு ஊடுகடத்துவது மட்டுமல்ல அதன் ஆழத்தினை சைவசித்தாந்த மரபின் வழி விளக்கியும் வருகிறார். அத்துடன் சிவத்திரு.ந.ஒளியரசு ஐயாவின் தலைமையில் அச்சாணியாக நின்று அரன்பணி எனும் அரும்பணியாக பாழடைந்த கோயில்களை திருத்தும் திருப்பணிகளை **"ஊர்கூடிப் பணிசெய்வோம்"** என்று விழுதுகளாக மாற்றி, அப்பர் சுவாமிகள் வழியில் **"என்கடன் பணிசெய்து கிடப்பதே"** என்று முழுநேரமும் இறைபணிக்காக நல்கி வாழ்ந்துவருகிறார். இவரது அரும்பணிகள் சிறக்க, வளர யாழ்ப்பாணம் தென்னாடு ஐம்பூதநாதரின் அருளாசிகள் என்றும் கிடைக்கவேண்டும் என்று விண்ணப்பம் வைக்கிறோம்.

**(07ஆம் பக்கம் பார்க்க)**

# சைவநெறி உய்யவந்த தெய்வச் சேக்கிழார்

உலகின் மூத்த முதல் நெறியாகிய சைவநெறியின் சாரமே, தொண்டுதான்! தனக்காகவும் பிறருக்காகவும், தவமும் தானமும் செய்வதோடு இறைக்காகவும், வாழும் முறைக்காகவும் தொண்டு செய்வதும் இந்த நெறியின் தெளிவாகக் கொள்ளப்படுகிறது. நான் என்கிற அகங்காரமும், எனது என்கிற மமதையும் நீங்கி எவன் ஒருவன் தொண்டு செய்கிறானோ, அவன் இறைவன் என்கிற நிலைக்கு உயர்த்தி வழிபடப்படுவான் என்பதை,வரலாறு எமக்கு நினைவு படுத்துகிறது.

"தாழ்வெனும் தமையோடு, சைவமாம் சமயம் சாரும், ஊழ்பெறல்" என்கிறது சிவஞான சித்தியார். எனவே, தம்மை தாழ்த்தி கொண்டு, தொண்டு செய்யும் தன்மையே, உலகின்



மிகப்பெரிய விடயமாகவும் இருக்கிறது. அந்த நிலை வாய்க்கப்பெற்றவர்கள் அருளாளர்களாகத் தம் வரலாற்றால் எம்மை வழிபடுத்துவார்கள்! அந்த அருள் பெருகும் வரலாறு ஆண்டாண்டு காலமாய் கடந்து வரவேண்டும், இளைய தலைமுறைக்கு தொண்டின் சிறப்பைச் சொல்ல தொடர்ந்து வரவேண்டும் என்பதற்காக, தன் வாழ்நாளை அர்ப்பணித்து, உழைத்த பெருந்தகை, தெய்வச்சேக்கிழாரை அவரது பணிகளால் உயர்த்தி பாரின் மிசை வணங்குவதே சைவத்தமிழரின் பெருங்கடனாகும்!

பெரியபுராணமாகிய திருத்தொண்டர் புராணத்தை எமக்கு தந்து, சைவசமயத்தின், ஒப்பற்ற பெரும் புதையலை உருவாக்கிய பெருமை வாய்ந்த, தெய்வச்சேக்கிழாரை கடந்த பதின்நான்காம் திகதி, திங்கட்கிழமை அவரது குருபூசை நன்னாளில் வணங்கி நிறைந்தோம். அவரின் அர்பணிப்பான பணியை அடுத்த தலைமுறை ஓதி உணரவேண்டும் என்று, 14ம் நூற்றாண்டில் தோன்றிய உமாபதி சிவாச்சாரியார் ' சேக்கிழார் புராணம் ' என்கிற ஒப்பற்ற நூலை எமக்கு தந்தார். நூற்று மூன்று பாடல்களைக் கொண்டமைந்த அந்நூலே சேக்கிழார் வரலாற்றை நாம் அறியத் துணை செய்யும் தொன்மையான ஆவணமாகும். இன்று தமிழர்கள் ஆவணப்படுத்துவதில் பின்னிற்பதாக அனைவரும் குறை சொல்வதைக் கண்ணூடாகக் காண்கிறோம் .

ஆனால் உலகம் 'ஆவணப்படுத்தல்' என்ற எண்ணக்கருவை, எடுத்தாள முதலே, கல்லிலும், செப்பிலும், ஆவணப்படுத்திய வர்கள் தமிழர்கள் தான்! வாழ்ந்து உயர்ந்த மனிதர்களின் வாழ்வை, ஆவணப்படுத்த வேண்டும் என்ற உயரிய சிந்தனையில் காவியங்களையும் புராணங்களையும் பாடி வைத்தவர்கள் தான் சைவத்தமிழர்கள். ஆனால் அவற்றை, வெறுமனே பத்தி இலக்கியங்களை மட்டுமே பார்த்து எம், மகத்துவத்தைத் தொலைத்தது வருத்தமே! இந்த மகத்தான பெரும் பணிக்கு மணிமகுடம் வைத்ததை போல வந்து சைவநெறிக்கு வாய்த்தவர் தான் தெய்வச் சேக்கிழார்

திருத் தொண்டர் புராணத்தை எழுதும் போது, அவர் அதைக் கற்பனையிலேயே, அல்லது, செவிவழிச் செய்திகளை ஆதாரமாக வைத்தோ, முன்வைக்கவில்லை. தன் வகித்த, நாட்டின் பெரும் பணியான முதல் அமைச்சர் பதவியைத் துறந்து, திருத்தொண்டர்கள் வாழ்ந்த ஊர்களைத் தேடித் தேடிப் போனார். திருத்தலங்களை ஆராய்ந்து தேவாரத் திருப்பதிகங்களை ஓதி உணர்ந்து, மிக நுட்ப்பமாகத் திறனாய்வு செய்தார். இதுவரை உலகில் எவரும் செய்திராத மிகமிகக் கண்ணியமான திறனாய்வு அது! தான் சரிவர உறுதிப்படுத்தாத எந்தத் தகவலையும், இலக்கிச் சுவைக்காக வேனும் அந்த ஆவணச் சுரங்கத்தில் உட்சேர்க்கவில்லை. நாயன்மார்களின் தாய் தந்தையர்களின் பெயர்களைக் கூட சரிவரத் தெரிந்தால் மட்டுமே குறிப்பிட்டார். எந்த நாயன்மார்களின் பெயரையோ, அல்லது அவரை விழிக்கும் போது, கவிக்கூற்றாக, 'அன், ஆன்' விகுதிகளைச் சேர்க்க வில்லை. அவ்வளவு கண்ணியமாக, அடியார்க்கு அடியாராக நின்று அந்த ஆவணப் பேழையில் அருளமுதம் நிறைத்தார்!

"பணியுமாம் என்றும் பெருமை" என்றாரே வள்ளுவர், அந்தக்குறலுக்கு தானே உதாரணமாய் தோன்றினார். அந்தப் பணிவு, தெளிவால் விளைந்த விளைவு! இறை அருளால் கனிந்த கனிவு, அதனாலே தான், தம் இன்று, 'வள்ளுவன் சொன்னான், காம்பன் பாடினான்' என்று பதிவு செய்கின்றோம், ஆனால் அதே தொனியில், அதே விகுதியில், 'சேக்கிழார் பாடினான்'என்றோ, 'சேக்கிழார் சொன்னான்' என்றோ கூறவும் முடியாது, பதியவும் தோன்றாது! இது தெய்வத் தன்மையின் சான்று!



**சிவத்திரு. செந்தமிழாதன்**

சேக்கிழாருக்கு தானாய் வாய்த்தது என்பதை விட, பணிவாலும், தொண்டையும், தொண்டரையும் இறைவனுக்கு நிகராக உயர்த்தியதாலும் பெற்ற பேறென்றே கருதலாம். தெய்வச்சேக்கிழார் என்ற ஒருவர் சைவத் தமிழ் உலகுக்கு கிடைத்திராமல் போயிருந்தால், திருத்தொண்டர் தொகையிலும், திருத்தொண்டர் திருவந்தாதியிலும் இருந்த அடியவர் பெருமை, பாசிமூடிய பவளமாயும், மாசியில் மறைந்த மதியாயும் போயிருக்கும். அதை விரித்திச்சொன்ன தெய்வச்சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணமே, ' தொண்டை ' சாரமாக கொண்ட, சைவத்தின் பெரும் எழுச்சிக்குத் துணை நின்றது என்பதே உண்மை! அறுபத்து மூன்று தனியாடியர்களதும், ஒன்பது தொகையடியார்களதும், அதியுச்சமான இறையன்பை, அவர்களின் தொண்டின் பற்றுதலையும், இறைவன் புகழ்பாடுவதையன்றி, முத்தியின் மீதும் பற்றற்று இருக்கும் அவர் பான்மையையும் பத்திச்சுவை நனி சொட்டச்சொட்ட எமக்கு அளித்ததாலேயே, இன்று இத்தகு பெரும் வரலாற்றைத் தொண்டர்கள் சார்ந்து நாம் எம் கைகளில் வைத்து வணங்குகின்றோம்.


எப்படி திருநெறிய செந்தமிழ் தந்த மூவர் தேவாரங்களை, மருந்தாக, மந்திரங்களாக, புரிந்து கேட்கப்படும் புண்ணியங்களாக கொள்கிறோமோ, அப்படியே தெய்வச்சேக்கிழார் திருவாய் மொழிந்த பெரியபுராணத்தையும் சைவத்தமிழ் உலகம் செப்பேட்டில் பதித்து, நடராசர். திருக்கமலங்களில் வைத்து, உயர்த்தியது.

**"தோடுசெய்த திருநெறிய செந்தமிழோடொக்கும் என்று வரை தொடர்ந்து செய்**
**பேடு செய்து நடராசர் சந்தியிலேற்றுனர்களிது பாலிசூழ்,**
**நடுசெய்ததவ நீடுகுன்றைவள நகரிசெய்ததவ நிகரிலாப்,**
**பீடுசெய்ததாகி ரதிகுலத்திலகர் சேக்கிழார் செய்த பெரும் தவம்."**

என்கிறார், கொற்றவன்குடி - உமாபதிசிவாச்சாரியார். சேக்கிழாரின் பெருங்குடி செய்த தவம் மட்டுமல்ல, சேக்கிழாரை பெற்றதே சைவத்தமிழ் உலகின் மிகப்பெரும் தவப்பயனாகிறது.

இன்று வாழும் தலைமுறைக்கு சேக்கிழார் வரலாறு, ஒரு மகத்தான வழிகாட்டி! பணியும் தன்மையும், கீழ்ப்படிந்து ஒழுகும் பாங்கும் இல்லாமல் முறைதவறிப்பயணிக்கும் இளைய தலைமுறைக்கு நல்ல மருந்து. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் வரலாறு, பெரியபுராணத்தின் பெரும்பங்காய் நிறைந்து நீள்கிறது. 'பிள்ளை பாதி புராணம் பாதி' என்று, சான்றோர் வழங்குமளவுக்கு, தெய்வச்சேக்கிழார், ஞானசம்பந்தரின் வரலாற்றை அடுத்து வரப்போகும், இளைய சைவத்தமிழ் பிள்ளைகளுக்காக தந்தார் என்பதே உயர்ந்தோர் கொள்கை!

வேதநெறி தளைத்து ஓங்க மிகுசைவத்துறை விளங்க, இன்னும் இன்னும் இளைய தொண்டர்கள் தோன்றி வரவேண்டும் என்பதே, தெய்வச்சேக்கிழாரின் பெருங்கனவாக பெரியபுராணம் எங்கும் நிறைந்து இருக்கிறது. எந்த அமங்கலச்சொற்களும் இன்றி, எந்த அகந்தை விழிப்புக்களும்






இன்றி, தெளிந்த நீரில், நிறைந்த மலராக, பெரியபுராணத்தை சேக்கிழார் படைத்த போது, இயல்பாக ஞானசம்பந்தரின் பெருமையை உரைத்து, திருநாவுக்கரசரின் முதுமையின் வாசலின் நின்றும் இறைவனை அணுகும் தன்மையையையும் வியந்தும், வயது, முத்திக்கும், தொண்டுக்கும் தடையில்லை என்றும் எமக்கு சான்று தந்தார்.

எல்லாவற்றுக்கும் மேலாக, வரலாறு நீட்சித்தன்மை வாய்ந்தது. அது தான் புராணம் பாடும் காலத்தோடு முடிவுற்றுப் போகாது, தான் வாழ்வதும் நாளை வரலாறாகும், நாளைகளும், நாளை மறுநாள் வரலாறாகும். என்பதை உணர்ந்தவர் சேக்கிழார்! சைவத்தின் வேர், தென்பாரதத்தில் இருந்தாலும், சைவத்தின் விழுதுகளாக சிவனையே தொழுது முத்தியின்பம் பெற்றவர்களும், பெறப்போபவர்களும், தமிழக எல்லைகளுக்கு அப்பாலும் இருப்பார்கள் என்பதை, ஆய்ந்து தெளிந்தவர் தெய்வச்சேக்கிழார்,

**"மூவேந்தர் தமிழ் வழங்கும் நாட்டுக்கு அப்பால்**
**முதல்வனார் அடிசார்ந்த முறைமையோரும்**
**நாவேய்ந்த திருத்தொண்டர் தொகையில் கூறும்**
**நல்ல தொண்டர் காத்து முன்னும் பின்னும்**
**பூவேய்ந்த நெடுஞ்சடைமேல் அடம்பு தும்பை**
**புதிய மதி நதி இதழி பொருந்த வைத்த**
**சே ஏந்து வேல் கெடியான் அடிச்சார்ந்தாரும்**
**செப்பிய அம்பாலும் அடிச்சார்ந்தார் தாமே."**

என்று, அப்பாலும் அடிசார்ந்தார் தமை, சுந்தரமூர்த்தி நாயனாரின் திருத்தொண்டர் தொகையின், நீட்சியாக, அவர்கள் யார் யார் என்று பாடி எம்மையும் வணங்குமாறு அருளாணைத் தருகின்றார். திருத்தொண்டர் அறுபத்துமூவரை என்ற மட்டுப்பாடோ, வரையறையோ இல்லை. அந்த எண்ணப்பாங்கு யாருக்கும் வரவும் கூடாது என்பதே சைவத்தின் கோட்பாடாகும். தன் வாழ்நாள் முழுவதும் சைவம் உய்வதற்க்காக, திருத்தொண்டர்கள் வரலாற்றைத் தேடிய தெய்வச்சேக்கிழாரின். விருப்பும் அதுவே ஆகும்.

இன்று உலகம் இயந்திரமயமாகி சுழல்கிறது. தொண்டு செய்வதற்கும், அதன் மாண்பை மற்றவர்களுக்கு சொல்லவும் யாரும் முன்வருவாருமில்லை. பெரும் தொற்றினைப் போலத்தான், சரியைத்தொண்டின் தார்ப்பரியமும் குறைந்தே போனது. ஆனால், மனிதர்களுக்குச் செய்யும் சேவையே மகத்தான சேவையெனக்கருதி மருத்துவ பணியாளர்களும், சமூகநலன் விரும்பிகளும் அயராது தினமும் உழைக்கின்றனர். இந்த தொண்டு ஆண்டாண்டாய் தொடர்ந்து வந்த தொண்டு மனப்பாங்கின் தொடர்ச்சியே தான்! அந்த மனப்பாங்கு வளரக் காரணமாய்

அமைந்தவரும் சேக்கிழார் பெருமானே தான்! அருளாளர்களாய் ஆற்றலாளர்களாய் இந்த மண்ணில் தோன்றி இறைவனின் பெருங்கருணைப் பேறுபெற்று, இறையோடு இரண்டறக்கலந்து பேரானந்த நிலை எய்திய, திருத்தொண்டர் வரலாற்றை எமக்கு தந்து தெய்வநிலை அடைந்த சேக்கிழாரின் திருப்பாதங்களை நினைந்து வணங்குவோமாக.

**"என்றும் இன்பம் பெருகும் இயம்பினால்**
**ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட**
**மற்று உளார் அடியார் அலர் வான் புகழ்**
**நின்றது எங்கும் நிலவி உலகலாம்."**

**திருச்சிற்றம்பலம்**

## ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

# அருள்மிகு கோல்வளைநாயகி உடனுறை குற்றம் பொறுத்த நாத சுவாமி திருக்கோயில் – திருக்கருப்பறியலூர்

## தேவாரப் பாடல் பெற்ற காவிரி வடகரை சிவபுரங்களில் 27வது திருக்கோயில்

### கொகுடிக்கோயில்

கொகுடி முல்லையைத் தலக்கொடியாக கொண்டதால், இப்பெயர் பெற்றது. (கருப்பறியலூர் என்பது ஊரின் பெயர், கோயிலின் பெயர் கொகுடிக்கோயில்)

### அமைவிடம்: (நாகப்பட்டினம் மாவட்டம் - தமிழ்நாடு)

மயிலாடுதுறை - மணல்மேடு சாலையில் அமைந்துள்ள பட்டவர்த்தி என்ற சிற்றூரில் இருந்து வடகிழக்கே சுமார் 2 கி.மி தொலைவில் இத்தலம் உள்ளது. வைத்தீசுவரர் கோயில் - திருப்பனந்தாள் சாலையில், "தலைஞாயிறு" என்று கைகாட்டி உள்ள இடத்தில், வலதுபுறம் பிரிந்து செல்லும் சாலையில் சென்றால், இத்தலத்தை அடையலாம். வைத்தீசுவரர் கோயிலில் இருந்து சுமார் 8 கி.மி. தொலைவில் உள்ளது.

### திருத்தலச் சிறப்பு

இத்திருத்தல இறைவன் சுயம்பு மூர்த்தியாக அருள் பாலிக்கிறார். இத்தல விநாயகர் சித்தி விநாயகர் என்ற பெயரில் அருள்பாலிக்கிறார். சீர்காழி சட்டைநாதர் கோயில் அமைப்பை போலவே, இக்கோயிலும் மலைக்கோயில் அமைப்பில் கட்டப்பட்டுள்ளது. எனவே இத்தலத்தை "மேலைக்காழி" என்பர். சிவனின் தேவாரப்பாடல் பெற்ற 274 சிவபுரங்களில் இது, 27 வது சிவபுரம் ஆகும்.

குழந்தை பாக்கியம் இல்லாதவர்களும், குழந்தை பிறந்து, இறந்து விடும் தோசம் உள்ளவர்களும், ஆண் மகவு வேண்டுபவர்களும், பெண் மகவு வேண்டுபவர்களும், இத்தல இறைவனிடம் வேண்டிக்கொள்கின்றனர். இத்தலத்தில் செய்யும் அறச்செயல்கள் ஒன்றுக்கு பத்தாக பெருகும் என்பது தொன் நம்பிக்கை. 72 முனிவர்கள் இங்கு வழிபாடு செய்து முத்தி பெற்றுள்ளனர். இத்தலத்தில் வந்து வழிபடுபவர்கள், அடுத்த பிறவியில் தாயின் கருவில் தங்கமாட்டார்கள், அதாவது அவர்களுக்கு, அடுத்த பிறவி கிடையாது, சிவனின் பாதத்தில் சேர்ந்துவிடுவார்கள் என்பது தொன் நம்பிக்கை. எனவே தான் இத்திருத்தலம் "கருப்பறியலூர்' என வழங்கப்படுகிறது. ஒரு முறை இந்திரன், இறைவன் என்று அறியாமல் அவர் மீது வச்சிரம் எறிந்த, குற்றத்தைப் பொறுத்தருளியமையால் குற்றம்பொறுத்த நாதர் ஆனார் என்பது தொன்நம்பிக்கை. இங்கு சோழர் காலக் கல்வெட்டுகள் உள்ளன. பாதுப்பீடை (சூரிய தோசம்) நீக்கும் கழுவாய்த் தலம்.



**இறைவன் திருப்பெயர் :** குற்றம் பொறுத்தநாதர் (அபராதசமேசுவரர் )

**இறைவியார் திருப்பெயர் :** கோல்வளை நாயகி (விசித்திர வலையாம்பிகை )

**கோயில்மரம் :** கொடிகுமுல்லை

**திருக்குளம் :** சூரிய திருக்குளம், பொற்றாமரை, இந்திர தீர்த்தம்

**வழிபட்டோர் :** இந்திரன், கதிரவன், விசித்திராங்கன் என்ற மன்னன், அனுமன், இராவணன்

**பாமாலை:** திருஞானசம்பந்தர், சுந்தரர்

### தலத்தின் மீது தேவார முதலிகளால் பாடப்பட்ட பதிகங்கள்

### திருஞானசம்பந்தர் பாடிய பதிகம்

சுற்றமொடு பற்றுஅவை துயக்குஅற அறுத்துக்
குற்றம்இல் குணங்களொடு கூடும் அடியார்கள்
மற்று அவரை வானவர்தம் வான்உலகம் ஏற்றக்
கற்றவன் இருப்பது கருப்பறிய லூரே.

### சுந்தரர் பாடிய பதிகம்

சிம்மாந்து சிம்புளித்துச் சிந்தையினில்
வைத்துகந்து திறம்பா வண்ணங்



கைம்மாவின் உரிவைபோர்த் துமைவெருவக்
கண்டானைக் கருப்ப றியலூர்க்
கொய்ம்மாவின் மலர்ச்சோலைக் குயில்பாட
மயிலாடுங் கொகுடிக் கோயில்
எம்மானை மனத்தினால் நினைந்தபோ
தவர்நமக் கினிய வாறே.

சுந்தரர் தனது பதிகத்தில், இக்கோயிலை கொகுடிக்கோயில் என்று ஒவ்வொரு பாடலிலும் குறிப்பிட்டுள்ளார். தனது பதிகத்தின் முடிவில், அவரது பதிகத்தை தினமும் பாடுவர்களுக்கு அவர்கள் செய்த வினையாவும் வாடுவது மிகவும் எளிது என்று குறிப்பிடுகின்றார்.

### திருத்தல வரலாறு

இந்தத் தலத்திலுள்ள இறைவன் அனுமனால் பூசிக்கப்பட்டவர். யுத்தத்தில் இராவணனைக் கொன்றார், இராமர். அந்த தோசத்தை நீக்க இராமேசுவரத்தில் சிவபூசை செய்ய நினைத்தார். அனுமனிடம் இரண்டு நாழிகைகளுக்குள் சிவலிங்கம் கொண்டு வருமாறு கட்டளையிட்டார். இராமரின் கட்டளையை ஏற்ற அனுமன் வடதிசை நோக்கிச் சென்றார். ஆனால், அனுமன் வரத் தாமதமானது. இராமர் மணலால் இலிங்கம் அமைத்து வழிபட்டார். அவரது தோசமும் நீங்கியது. தான் வருவதற்குள் இராமர் மணலால் இலிங்கம் அமைத்து வழிபட்டதை அறிந்த அனுமன் வருந்தினான். அந்த இலிங்கத்தை தன் வாலால் கட்டி இழுத்தார், முடியவில்லை. இப்படிச் செய்ததால், அனுமனுக்கு சிவ அபராதம் விதிக்கப்பட்டது.

"சிவனை நோக்கி தவமிருந்தால் அந்த அபராதம் நீங்கும்" என இராமர் அனுமனுக்கு யோசனை கூறினார். அனுமனும் அவ்வாறே செய்தான். அவன் முன்னால் சிவன் தோன்றி "அனுமனே.. நீ தலைஞாயிறு சென்று வழிபாடு செய்தால் இந்த தோசம் விலகும்" என அருள்பாலித்தார். அனுமனும் அவ்வாறே இங்கு வந்து வழிபட்டு தோசம் நீங்கப் பெற்றார். அதன் பிறகு சிவனின் கருணைக்கு வியந்து, இந்தத் தலத்தின் வட கிழக்கில் தன் பெயரால் ஒரு இலிங்கம் அமைத்து, வழிபாடு செய்தார். இன்று, அந்தத் தலம் 'திருக்குரக்கா' என அழைக்கப்படுகிறது.

இராவணனின் மகன் மேகநாதன். இந்திரனை போரில் வென்றதால் இவனுக்கு " இந்திரஜித் " என்ற பெயர் ஏற்பட்டது. ஒரு முறை மேகநாதன் வானத்தில் பறக்கும் விமானம் மூலம் பறந்து கொண்டிருந்தான். வழியில் விமானம் தடைப்பட்டு நின்றது. கீழே பார்த்தபோது சிவாலயத்தின் மீது பறந்ததை உணர்ந்தான். இதனால் இந்த தடை ஏற்பட்டது, என அறிந்தான். இதனால் வருந்திய மேகநாதன், இத்தல தீர்த்தத்தில் நீராடி இறைவனை பூசித்தான். இவனது கவலை நீங்கி விமானம் மறுபடியும் பறந்தது. இப்படிப்பட்ட அற்புத இலிங்கத்தை இலங்கைக்கு கொண்டு செல்ல முயன்றான். அது முடியாமல் போனதால் மயங்கி விழுந்தான்.

இந்த செய்தியை கேட்ட இராவணன் இத்தல சிவனின் திருவடியில் விழுந்து, தன் மகனின் குற்றத்தை பொறுத்து அருளுமாறு வேண்டினான். இறைவனும் அருள் செய்தார்.



சிவத்திரு குமரேசன் இராஜசிம்மன்

எனவே இத்தல இறைவன் "குற்றம் பொறுத்த நாதர்" எனும் கதையும் உண்டு.

விசித்திராங்கன் என்ற மன்னன் தன் மனைவி சுசீலையுடன் குழந்தை பாக்கியம் வேண்டி இங்கு வந்து வழிபாடு செய்து, இறைவன் அருளால் குழந்தை பெற்றான். இதனால் மகிழ்ந்த மன்னன் இந்தத் தலத்தை அழகுறக் கட்டினான் என்பது வரலாறு.

சிலருக்குக் கருவிலே சிசு கலைவது உண்டு. சிலருக்கு குழந்தைப் பிறந்தவுடன் இறந்துவிடும். சில குடும்பங்களில் விபத்துகளினால் துர்மரணம் நிகழ்வதும் உண்டு. இவை அனைத்தும் 'ஆலாள' என்ற தோசத்தினால் ஏற்படுகின்றன. இங்குள்ள இறைவனை வந்து வழிபட்டால் மேற்படி தோசம் நீங்கும் என்பது நம்பிக்கை!

கதிரவன் இந்தத் திருத்தலத்தை வழிபட்டதால் 'தலைஞாயிறு' என்று அழைக்கப்படுகிறது. தான் பெற்ற சாபத்தில் இருந்து விடுபடப் பல சிவத்தலங்களில் சூரியன் வழிபட்டான். அவ்வாறு வழிபட்ட தலங்கள் அனைத்தும் பாதுப்பீடை கழுவாய்த் தலங்களாக போற்றப்படுகின்றன. அந்த வகையில், திருக்கருப்பறியலூர் தலமும், பாதுப்பீடை கழுவாய்த் தலமாக விளங்குகிறது. இந்த தோசம் உள்ளவர்கள் இந்தத் தலத்துக்கு வந்து இறைவனை வழிபடுவதன் மூலம் தோசம் நீங்கப் பெறலாம்.

" இந்தத் திருத்தலத்தில் செய்யும் அறச்செயல்கள் ஒன்றுக்குப் பத்தாக பெருகும்" என்பதை நான்முகன் வசிட்டருக்குக் கூறினார். அதனால் வசிட்டர் இங்கு, இலிங்கம் அமைத்து வழிபட்டு, மெஞ்ஞானம் பெற்றார் என்கிறது தலபுராணம்.

### கோயில் அமைப்பு

தருமபுர ஆதீனத்தின் கட்டுப்பாட்டில் உள்ள இவ்வாலயம், கிழக்கு நோக்கிய மூன்று நிலை இராசகோபுரத்துடன் அமைந்துள்ளது. உள்மண்டபம் வௌவால், நெற்றி மண்டப அமைப்பில் காணப்படுகிறது.

இந்தக் கோயில் கிழக்கு நோக்கிய மூன்று நிலை இராசகோபுரத்துடன் அமைந்துள்ளது. உள் மண்டபம், வௌவால் நெற்றி மண்டப அமைப்பில் அமைந்திருக்கிறது. மூலவர் குற்றம்பொறுத்த நாதர் சுயம்பு மூர்த்தியாகக் கிழக்கு நோக்கியும், தாயார் கோல்வளை நாயகி தெற்கு நோக்கியும் பத்தர்களுக்கு அருள்பாலிக்கின்றனர். கருவறை சுற்றுப் பிராகாரத்தில் விநாயகர், இலிங்கோற்பவர், மலைமகள் மற்றும் நான்முகன் ஆகியோர் காணப்படுகின்றனர்.



குற்றம் பொறுத்தநாதர்

வெளிப் பிராகாரத்தில் சீர்காழியில் இருப்பதுபோல உயர்ந்த தனிக்கோயிலாக சட்டைநாதர் திருமுன் உள்ளது. மேலேறிச் சென்று, தோணியப்பரைத் வணங்கி, அதற்கும் மேலே சென்று, சட்டைநாதரைத் வணங்க செங்குத்தான மரப்படிகளை ஏற வேண்டும். தோணியப்பர் திருமுன்னை, இத்தலத்தில் கர்ப்பஞானேசுவரர் உடனுறை கர்ப்பஞானபரமேசுவரி திருமுன் என்றழைக்கின்றனர். கோயில் மரமான கொகுடிமுல்லை, இலிங்கோற்பவருக்கு எதிரில் காணப்படுகிறது.

கோயில் செல்வதற்கான உதவி மற்றும் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயண கட்டுரை ஆசிரியரைத் தொடர்பு கொள்ளலாம்.

**சிவத்திரு.குமரேசன் இராஜசிம்மன்**
உதவிப் பேராசிரியர்
SRM கலை மற்றும் அறிவியல் கல்லூரி
919003296221 - easanaithedi.in.







சிவத்திரு. சிவ செந்தமிழாதன்,
தலைவர் - சைவ மாணவர் சபை,
(பதிவு-HA/4/JA/343)
0715588737, aathan@thennadu.org


# தொண்டராய் தோன்றுவோம்!

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு, தடையாய் இன்று எம்மை ஆட்கொள்ள ஆயிரம் புறவிசைகள் அருகிலேயே இருக்கின்றன! வளரும் புதிய தலைமுறையை, நன்னெறியில் நின்று விடுத்தும், அவர்கள் செயலாற்றலைத் தடுத்தும், கட்டிப்போடவும், அவர்கள் சிந்தனைகளுக்குள்ளே, விடத்தை விதைக்கவும், விரும்பத்தகாத சில மாற்றங்களை காலம் தன்னுள் வருவித்துக் கொண்டுள்ளது! உலகமே, தன்னை முடக்கிக்கொண்டு, கிடக்கும் இந்த காலத்தில், இணைய வெளியில் நடக்கும் அபத்தமான விடயங்களைக் கண்டும் காணாமலும் கடந்து விட முடியவில்லை! சமுகமுற்றடக்கத்தால், சமயம் வளரவில்லை, தமிழ் தளைக்கவில்லை, அரங்கங்கள் திறக்கவில்லை, விழாக்களும், பொது நிகழ்வுகளும் சிறக்கவில்லை என்று, வருந்தி இருந்தோர்க்கு வரமாய் வந்த, இணைய நிகழ்நிலை மேடைகளும், செயலிகளும், எந்த எதிர்பார்ப்புகளுக்கு வரமாய் வந்தனவோ, அவற்றுக்கே சாபமாகவும் முடிந்து விடும் என்பதை முன்னறிவிப்பு செய்வதில் தயக்கமில்லை!

சில சமூக வலைத்தலங்களிலே, இணைய நிகழ்நிலை மேடைகளை இயக்க தெரிந்தவர்கள், அந்த ஒரே தகுதியை வைத்து கொண்டு, சமய அரங்கங்களையும், பட்டிமண்டபங்களையும். “செய்து காட்டுகின்றோம் பாருங்கள்...” என்று திடீரென முளைத்திருப்பது, இளைய தலைமுறைக்கு தவறான வழிகாட்டலை கொடுக்கிறது! வளர்ந்து வரும் புதிய ஆற்றலாளர்களும் அந்த வலையில் சிக்குண்டு கிடப்பதை எண்ணிக்கவலை மிகக்கொள்கிறோம்! புதிய முகங்களுக்கு வாய்ப்புக்கொடுக்கின்றோம், இணையம் அனைவருக்குமானது என்று தம்பட்டம் அடித்துக்கொண்டு, நம் சமயத்தினை எதிர் காலம் குறித்த கேள்விக்கு உள்ளாக்குகின்றனர். புதிய முகங்களுக்கு வாய்ப்பு கொடுப்பது வரவேற்கத்தக்கது. எனினும், அதற்கு முன்னர் பயிற்சி கொடுப்பது சாலச்சிறந்தது!

அண்மையில் இணையப் பொதுவெளியில், இப்படி அரங்கேறிய, சிறுபிள்ளைத்தனமொன்றில், ஆண்டாளின் அன்பு சிறந்ததா? மணிவாசகரின் அன்பு சிறந்ததா? என்று ஒரு பட்டிமண்டபத்தை இளையவர்களை வைத்து போட்டியாக நிகழ்த்தி முடிந்திருந்தனர்! தலைப்பை கண்டவுடன், இவர்களை எண்ணி கவலை கொள்வதா?... இல்லையேல் கழிவிரக்கமடைவதா என்று தெரியாத மனநிலை விரிந்தது! அதன் பின்னர், இன்னுமொரு சமுகவலைத்தளப் பொது வெளியில், “சிறந்த தலைவராவதா உங்கள் கனவு....?” என்ற கேள்வியோடு இணைய வழி பயிற்சி மூலம் தலைவராகிவிடத்துடிப்போர்க்கு வாய்பளித்து சான்றிதழும் நல்கும் அபத்தத்தைக் கண்டு கலங்கினோம்!

தொண்டிலும், உயர்ந்த இறை அன்பிலும், எது சிறந்தது என்று கேள்வி கேட்டு, அதை வாதாப் பொருளாக்கி, எதிர்காலத்து இளையவரை, தூயமனத்தோடு தொண்டாற்றவிடாது தடுக்கும் செயலை என்னவென்று சொல்வது? எல்லா ஏற்றத்தாழ்வுகளைக் கடந்து, “ ஓடும் செம்பொன்னும் “ ஒன்றாக தெரியும் மனநிலை வாய்த்து தொண்டு செய்தால், இறையின்பம் பெறலாம் என்று வழிப்படுத்துவோர் முன்வராது போனால் இந்தப் பருவகால அபத்தம், விதைக்கும் விதைகளை நாளை அறுபடை செய்யும் போது கேடே விளைந்து கிடைக்கும்!

தலைவர்களுள் யார் சிறந்தவர் என்று கேளுங்கள் தவறில்லை! ஆனால், தொண்டர்கள் எல்லோரும் சிறந்தவர்களே... போற்றி வணங்குங்கள் என்று, பெரியபுராணத்தை எமக்கு நல்கிய தெய்வச் சேக்கிழாரின் குருபூசையையும் அண்மையில் தான் கடந்து வந்தோம்! நாட்டின் தலைமைப் பொறுப்பில் இருந்து நீங்கி தொண்டர் தம் பெருமையை நாளைய தலைமுறை அறிந்து ஒழுக வேண்டும் என்று, அயராது பணிசெய்து தெய்வ நிலையடைந்த அவரின் சிந்தனைகள் அறியாது, இன்று அரங்கேறும் இத்தகு விடயங்களில் இருந்து, இளையவர்கள் தள்ளி இருப்பதே சிறந்தது!

கடந்த மே மாதம் இருபத்தி எட்டாந் திகதி, கலாநிதி. செஞ்சொற்செல்வர். ஆறுதிருமுருகன் அவர்களின், மணிவிழாவை, இணைய நிகழ்நிலையூடாகவே ஆர்வலர்கள் கூடி நடத்தியிருந்தனர். நாட்டில் நிலவும் முற்றடக்கத்தை தாண்டி, உணர்வுபூர்வமான நிகழ்வாக பல நூற்றுக் கணக்கானவர்கள், இணைந்து இடர்காலத்திலும் அதனை ஒழுங்கமைத்தற்கு, அவர் ஆற்றிய தொண்டே காரணம் எனலாம்! தொண்டு செய்யாதவன், தலைமைப் பொறுப்பை ஏற்க தகுதியற்றவன் என்பதை உணர வேண்டும்!

எதிர்மறையான புறவிசைகளைப் புறம் தள்ளி விரிந்த மனதோடு தொண்டராய் தோன்றுவோம்!

**‘ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே**
**பாரம் ஈசன் பணி அல்லது ஒன்று இலார்**
**ஈர அன்பினர் யாதும் குறைவு இலார்**
**வீரம் என்னால் விளம்பும் தகையதோ’**

**திருச்சிற்றம்பலம்**

# கிராமச் சிறார்களுக்கு சைவத்தினையும் தமிழினையும் விதைக்கும் கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை - “வாழுக் கல்”




**“எண்ணிய எண்ணியாங் கெய்துவர் எண்ணியர் திண்ணியராகப் பெறின்”**

கொக்குவில் கிராமத்து ஏழைச் சிறார்களுக்கு கல்வி வசதியளித்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்பாடடையச் செய்யவேண்டும் என்ற பெரு நோக்கோடும், சைவமும் தமிழும் தழைத்தோங்கும் வகையிலும்,பாடசாலை ஒன்றைக் கட்ட வேண்டும் என்ற, பேரார்வம் தபாலதிபர் சிவத்திரு. இராசையா தம்பித்துரை அவர்களிடம் இருந்தது. சதாகாலமும், பாடசாலையின் வளர்ச்சியைப் பற்றிய சிந்தனையுடன் செயற்பட்ட சிவத்திரு. இராசையா தம்பித்துரை அவர்கள், கொக்குவில் மக்களிடமிருந்தும் கொழும்பிலுள்ள நலன்விரும்பிகளிடமிருந்தும் பணம் திரட்டியதுடன், மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் பணம் திரட்டி, பாடசாலை அமைப்பதற்கென 8 1/2 (எட்டரை) பரப்புக் காணியைக் கொள்வனவு செய்து, 84’× 25’ அளவிலான கட்டிடம் அமைக்கப்பட்டது. மேலும் சிறுகச் சிறுகச் சேமித்து, பாடசாலையின் வளர்ச்சி இன்று, 02 ஏக்கர் 01றூட் 3.36 பேச் நிலப்பரப்பைக் கொண்டதாக அமைந்துள்ளது.

சுவாமி விபுலானந்தர் கிழக்கிலங்கையில் இராமகிருஷ்ண மிசன் சார்பில், பல பாடசாலைகளைக் கட்டிக் கொண்டிருந்த காலத்தில், கொழும்பு இராமகிருஷ்ண மிசன் பத்தராக விளங்கிய சிவத்திரு. இராசையா தம்பித்துரை அவர்கள், அப்பொழுது இராமகிருஷ்ண மிசனின் அறங்காவலராக இருந்த சுவாமி அசங்கானந்தர், சுவாமி நிசங்கானந்தர், சுவாமி கேதீஸ்வரானந்தர் ஆகியோருடன் நெருங்கிய நட்புக் கொண்டிருந்தமையால், அவர்களின் உதவியுடன் சுவாமி விபுலானந்தரிடம் தொடர்ச்சியாக கோரிக்கை வைத்ததன் காரணமாக, சுவாமி விபுலானந்தர், சிவத்திரு. இராசையா தம்பித்துரை அவர்கள் அமைத்த பாடசாலையை இராமகிருஷ்ண மிசன் பாடசாலையாக ஏற்றுக்கொண்டார். அந்த வகையில் யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை 1938ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7ஆம் திகதி, முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரால் திறந்து வைக்கப்பட்டு, 21-04-1938 இல் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாராலேயே முப்பது மாணவர்களுக்கு ஏடுதொடக்குதலும் செய்து வைக்கப்பட்டது.



**நிறுவுனர். சிவத்திரு. இராசையா தம்பிதுரை**

ஆரம்ப காலத்தில் துறவிகள் தங்கிச் செல்வதற்காக ஆச்சிரம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. சுவாமி விபுலானந்தர் யாழ்ப்பாணம் வரும்போதெல்லாம், இங்கு தங்கிச் செல்வது வழக்கமாகும். சுவாமி அசங்கானந்தர், சுவாமி நிசங்கானந்தர், சுவாமி கேதீஸ்வரானந்தர், சுவாமி வீரேஸ்வரானந்த, சுவாமி சித்தானந்த, சுவாமி அபிநாசநந்த (கல்கத்தா), சுவாமி இரங்கானந்த, சுவாமி தென்ஜம்பவானந்தா, சுவாமி பவனந்தா(சிங்கப்பூர்) சுவாமி அவ்வாகநந்தா, சுவாமி ஆத்மகானந்தஜி, தவத்திரு குன்றக்குடி அடிகளார், சுவாமி ஜெகானந்தா, சுவாமி விரிபாக்சானந்த, சுவாமி கிருபானந்த வாரியார், எனப் பல தவசீலரின் புண்ணிய பாதக்கமலங்கள் பதித்து அருளாசி வழங்கிய புண்ணிய பாடசாலையாக, எமது பாடசாலை விளங்குகின்றது.

இன்றும், முன்னர் சின்மயா மிசனின் வதிவிட ஆச்சாரியாராக வகித்து, தற்காலத்தில் சைவத்தைத் தழைத்தோங்கச் செய்யும் பணியில் முக்கிய இடம் கொள்ளும்,தவத்திரு.வேலன் சுவாமிகள், நல்லை ஆதீனக் குரு முதல்வர் தவத்திரு. சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோரின் அருளாசி பெற்ற பாடசாலையாக எம் வித்தியாசாலை விளங்குகின்றது.

மேலும் பைரவப் பெருமான் எமது வித்தியாசாலை வளாகத்தில் வீற்றிருந்து, எமக்கெல்லாம் அருளாசி வழங்கிக் கொண்டிருக்கின்றார். வருடந்தோறும் பைரவப் பெருமானுக்கு ஆசிரிய சமூகத்தினால் தைப் பொங்கல் விழா நடாத்தப்படுவதுடன், சிவத்திரு. தம்பி கணேசன் அவர்களின் பங்களிப்பில் வருடாந்த பொங்கல் விழாவும் மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன் பகவான் ஸ்ரீஇராமகிருஷ்ண பரமகம்சரின் நினைவு விழாவும், வித்திட்டவர், சிவத்திரு. இராசையா தம்பித்துரை அவர்களின் நினைவு தினமும் வருடாந்தம், அவரின் மைத்துனர் சிவத்திரு.சி.அருமைத்துரை அவர்களின் பங்களிப்பில் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

பாடசாலைச் சூழலை இயற்கையுடன் ஒன்றித்து அமைக்க விரும்பிய சிவத்திரு. இராசையா தம்பித்துரை அவர்கள், பாடசாலைச் சூழலைச் சுற்றிலும் மகிழ மரம், வாகை மரம், சமணடலை, தேக்கு, கூழாம் மரம் ஆகிய பயன்தரு பெரு தருக்களை நாட்டி நீரூற்றி வளர்த்து வந்தார். இன்று அம்மரங்கள் வானளாவ வளர்ந்து காட்சியளிப்பதைக் காணலாம். பாடசாலை வளாகத்தில் நுழைவோர் அனைவரையும், இதமான தென்றல் காற்று வரவேற்று, உபசரிக்கும் பாங்கு மகத்தானது. எமது வித்தியாசாலையின் அமைதியானதும் வளமானதுமான சூழலில் மாணவர்களும் ஆசிரியர்களும் கல்விச் செயற்பாட்டில் மகிழ்வுடன் ஈடுபடுகின்றனர்.

(05ஆம் பக்கம் பார்க்க)

**இப்பகுதியில் உங்கள் பாடசாலையின் வரலாறு இடம்பெறவேண்டுமாயின் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.**


தென்னாடு செந்தமிழாகம சிவமடம்
குளங்கரை வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் : thennavan@thennadu.org

# கிராமச் சிறார்களுக்கு சைவத்தினையும் தமிழினையும் விதைக்கும்...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைச் சிறார்களின் கல்விப் பணிக்கென அறக்கட்டளை நிதியமொன்றை உருவாக்கி, அதிலிருந்து வரும் நிதியை 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு மேலதிக வகுப்பு நடாத்துவதற்கும், பாடசாலையில் கல்வி கற்று உயர்கல்வி தொடரும் மாணவருக்கு உதவவும் நடவடிக்கை மேற்கொண்டார்.

இவ்வித்தியாசாலையின் முதல் அதிபராக திரு இ. கந்தையா அவர்களும், முதல் ஆசிரியராக காந்தி ஆசிரியர் என அழைக்கப்பட்ட திரு பொ.கந்தையா அவர்களும், முதல் பெண் ஆசிரியராக திருமதி சொர்ணம்மா கந்தையா அவர்களும் சேவையாற்றினார்கள். இடைக்காலத்தில் பெண்கள் பாடசாலையாக கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா மகளிர் பாடசாலை என்னும் பெயருடன் செயற்பட்டது. எனினும் 1994 இல், மீண்டும் யா / கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, கலவன் பாடசாலையாக இயங்குகின்றது.

பாடசாலையின் முதல் அதிபர் திரு இ. கந்தையா (1938 -1964), அவர்களைத் தொடர்ந்து, திரு க. சுந்தரம் (1965 - 1970) அவர்களும், திரு ஆ.கந்தையா (1971-1976) அவர்களும், திருமதி ச.கணேஸ்வரன் (1976-1980) அவர்களும், பாடசாலையின் பழைய மாணவியான திருமதி செ. நவரத்தினம் (1980-1994) அவர்களும், திருமதி க. சுப்பிர மணியம் (1994-1999) அவர்களும், திரு இ. சிவபாதசேகரம் (1999-2007) அவர்களும், செல்வி க.கமலநாயகி (2007-2016) அவர்களும் சிறப்பாகக் கடமையாற்றி பாடசாலையின் வளர்ச்சியில் பெரு ம்பங்காற்றினார்கள்.

1978 ஆம் ஆண்டில் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினரால் 35’×20’ பரப்பளவில் மனையியல் ஆய்வு கூடமும், 35’×20’ பரப்பளவில் விஞ்ஞான அறையும் அமைக்கப்பட்டது. 1991, 1993ஆம் ஆண்டு காலப்பகுதியில் விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகி கட்டடங்கள் அழிந்தன. எனினும் பெற்றோர், நலன்விரும்பிகளினது உதவியுடனும், புவுணு நிறுவனத்தினாலும் பாடசாலை புனரமைக்கப்பட்டு, செயற்படுத்தப்பட்டது. திருமதி க. சுப்பிரமணியம் காலத்தில் வித்தியாசாலையின் (1998) வைர விழா மிகச் சிறப்பாக நிறைவேறியது.

அதிபர் திரு இ. சிவபாதசேகரம் காலத்தில் பாடசாலையின் பௌதீக வளத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டது எனலாம். 2003ஆம் ஆண்டில் உலக வங்கியின் உதவியுடன் நூல்நிலையம் அமைக்கப்பட்டது. உருவாக்கியவர் இ. தம்பித்துரை அவர்களின் மைத்துனர் திரு சி. அருமைத்துரை அவர்களால் மூன்றரைப் பரப்பு காணி கொள்வனவு செய்து விளையாட்டு மைதானத்திற்கெனக் வழங்கப்பட்டது. பாடசாலையின் முதலாவது அதிபர் திரு இ.கந்தையா அவர்களின் புதல்வன் சுசீந்திரன் தம்பதிகளினால் முதலாம் மாடியில் பிரார்த்தனை மண்டபம் அமைக்கப்பட்டது. இவரது காலத்திலேயே சிவத்திரு. இராசையா தம்பித்துரை அவர்களது சிலையும் நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

செல்வி க. கமலநாயகி அவர்கள் பாடசாலையின் அதிபராக செயற்பட்ட காலத்தில், தேசிய ரீதியிலான மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் சிறப்பாக அமையப் பெற்றதுடன், பௌதிக வளத்திலும் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் ஏற்பட்டது. பாடசாலையின் வைரவர் கோயில் திரு தம்பி கணேசன் அவர்களின் பங்களிப்புடன் புனரமைப்பு செய்யப்பட்டதுடன் குடமுழுக்கும் இடம்பெற்றது. மேலும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவர்களின் நூறாயிரம் ரூபா பாராளுமன்ற நிதி ஒதுக்கீட்டின் கீழும், வடமாகாணசபை விவசாய அமைச்சர் கௌரவ பொ.ஐங்கரநேசன் அவர்களின் இருநூற்று இருபத்தையாயிரம் நிதி ஒதுக்கீட்டின் கீழும், மேலும் நூறு அடி மதில் அதிபர் ஆசிரியர்களின் பங்களிப்புடனும் கட்டி முடிக்கப்பட்டது. பாடசாலையின் எல்லை மதிலின் குறிப்பிடத்தக்க பகுதி செல்வி க. கமலநாயகி அவர்கள் காலத்திலே கட்டப்பட்டது. உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் 2011இல் சமையலறை ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டது. மேலும் இரண்டு மாடிக் கட்டடத்தின் முடிவுறுத்தப்படாத எஞ்சிய பகுதி, இலண்டனில் உள்ள யாழ் விசன் நிறுவனத்தின் பங்களிப்புடன் நிறைவாக்கப் பட்டது. அன்றைய பாடசாலை அலுவலகத்திற்கு நல்லை நாதன் குடும்பத்தினரால் சீற் அடித்து, பூக்கல்லுகளுக்கிடையே கம்பி வலையும் பொருத்தப்பட்டது. கணனி அறைக்கு திரு க. மோகனதாஸ் அவர்களின் நிதிப் பங்களிப்புடன் கண்ணாடி யன்னல் பொருத்தப்பட்டது.

முதல் அதிபர் அமரர் இ. கந்தையா அவர்களின் மகன் திரு க. சுசீந்திரன் குடும்பத்தினரால் பாடசாலையின் பிரதான நுழைவாயில் வளைவு அமைக்கப்பட்டதுடன், பாடசாலை வளாகத்தில் சரஸ்வதி சிலையும் நிர்மாணிக்கப்பட்டது. 2016இல் இலண்டன் பழைய மாணவர் சங்கத்தினால் 60’×20’ நீளமுள்ள துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் அமைக்கப்பட்டது, எனினும் அதன் தரைப்பகுதிக்கு கொங்கிறீற்று இடப்படவில்லை.

2013ஆம் ஆண்டு பாடசாலையின் பவள விழாவும், பரிசில் தின விழாவும் அதிபர் செல்வி க. கமலநாயகி அவர்களின் தலைமையில் வெகுசிறப்பாக நடைபெற்றது. பவள மலர் வெளியீட்டிற்காக நூறாயிரம் ரூபா பங்களிப்பை இராசையா தம்பித்துரை குடும்பத்தினரான திரு சி. அருமைத்துரை அவர்கள் வழங்கியிருந்தார். பாடசாலை மாணவர்களின் கற்றல் மற்றும் இணைபாடவிதான செயற் பாட்டிற்குத் தேவையான நிதியினைப் பெற்றுக்கொள்வதற்காக, 2016ஆம் ஆண்டு “கல்வி அபிவிருத்தி நிதியம்” அதிபர் செல்வி க.கமலநாயகி மற்றும் நலன்விரும்பி திரு.தேவசகாயம் நடனகுமார் ஆகியோரின் ஆரம்ப வைப்பாக தலா நூறாயிரம் நிலையான வைப்பிட்டு ஆரம்பிக்கப்பட்டது. குறித்த வருடமே பழைய மாணவன் திரு குணரத்தினம் பிரதீபன் அவர்களினால் நூறாயிரம் வைப்பிடப்பட்டது. அளப்பரிய சேவையாற்றிய அதிபர் செல்வி க. கமலநாயகி அவர்கள், 2016 ஆம் ஆண்டு 8ம் மாதம் 20ம் திகதியுடன் ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து, 2016.08. 20 தொடக்கம் 2017 ஜனவரி 01 வரையான காலப் பகுதியில், திரு இ. தபானந்தன் அவர்கள் பதில் அதிபராக கடமையாற்றினார். இக்காலப்பகுதியில் அரசநிதி ஒதுக்கீட்டின் கீழ் மாணவர்களின் மலசலகூடங்களுக்கு பளிங்குக்கல் பதிக்கப்பட்டதுடன், ஆசிரியர்களுக்காக இரு மலசல கூடங்களும் கட்டப்பட்டன.

2017 ஆம் ஆண்டு ஜனவரி 02 இல், அதிபராக திரு குலசிங்கம் திலீபன் அவர்கள் பொறுப்பேற்று, மிகச்சிறப்பாகக் கடமையாற்றி வருகின்றார். 2017இல் பாடசாலை வளாகத்தின் முன்றலில் அலுவலகம் புதுப்பொலிவுடன் இடமாற்றம் செய்யப்பட்டது. 2018ஆம் ஆண்டில் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ த.சித்தார்த்தன் அவர்களின் நூற்றறுபத்தையாயிரம் நிதி ஒதுக்கீட்டின் கீழும், பழைய மாணவன் வைத்திய கலாநிதி யோ.தர்மேந்திரா அவர்களினால்

18.09.1978 திருமுருக கிருபானந்த வாரியார் பாடசாலைக்கு வருகை தந்தபோது



1991ஆம் ஆண்டு மாணவர்களிடம் திரட்டி வழங்கப்பட்ட நூற்றைம்பதாயிரம் செலவுப் பங்களிப்புடனும் எஞ்சியிருந்த எல்லை உயிர் வேலிகள் யாவும் பாடசாலை ஆளணியினரின் பங்களிப்புடனும் மதில்களாக மாற்றப்பட்டன. அத்துடன் பாடசாலையின் கவினுறு தோற்றத்தை மேலும் மெருகூட்டும் வகையில் மரங்களைச் சுற்றி இருக்கைக் கட்டுக்கள் கட்டப்பட்டன. துவிச்சக்கர வண்டி தரிப்பிடத்தின் தரைப்பகுதிக்கு 2018ஆம் ஆண்டு நலன்விரும்பி திரு சண்முகரத்தினம் சாந்திகுமார் (அமெரிக்கா) அவர்களின் அனுசரணையுடன் கொங்கிறீற்று இடப்பட்டது. 2018ஆம் ஆண்டில் கணனி அறைக்கான பளிங்குக்கல் வைத்திய கலாநிதி திருச்செல்வன் கணாதீபன் அவர்களின் அனுசரணையுடன் பதிக்கப்பட்டது. 2019ஆம் ஆண்டில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் ரூபா எழுநூறாயிரம் (ரூபா 700 000) பெறுமதியான வர்ணம் பூச்சு, சிறுதிருத்தம் என்பன பிரதான மண்டபத்தில் மேற்கொள்ளப்பட்டன. மேலும் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஈ.சரவணபவன் கம்பெரலிய செயற்றிட்டத்தினூ டாக ஒரு மில்லியன் பெறுமதியில் மைதானத் திருத்தம் சிறுவர் பூங்கா புனர்நிர்மாணம், உதைபந்தாட்டத் திடல் புனர்நிர்மாணம் என்பவற்றுடன், பூப்பந்தாட்டத் திடல், கரப்பந்தாட்டத் திடல் என்பனவும் நிர்மாணிக்கப்பட்டன. 2019இல் கொக்குவில் தென்னாடு மடத்தினைச் சேர்ந்த சிவத்திரு குணரத்தினம் பார்த்தீபன் அவர்களால் அறம் கட்டளை நிறுவனத்தினால் ஊடாக, எமது கல்லூரி பழைய மனைவி தெய்வத்திரு.சிவநேசரத்தினம் அவர்களின் நினைவாக, முழுமுதல் கடவுளாகிய சிவனின் அருவுருவத் திருமேனியாக “ஞானலிங்கேச்சரர்” திருநிலைப்படுத்தப்பட்டு கடவுள் மங்கல நன்நீராட்டு செந்தமிழில் செய்யப்பட்டதுடன், மகேசுவர பூசையும் நடத்தப்பட்டது. மேலும் 2020இல் மாணவர்களின் குடிநீர் வசதியை மேம்படுத்தும் நோக்குடனும், வித்தியாசாலைத் தோட்டத்திற்கு போதுமான நீரைப் பெற்றுக் கொள்ளும் வகையிலும், இராசையா தம்பித்துரை அவர்களின் சகோதரியின் குடும்பத்தினர் மற்றும் பிள்ளைகளினால் ஒரு மில்லியன் ரூபா செலவில் குழாய்க்கிணறும் நீர்த்தாங்கியும் அமைத்து, வழங்கப்பட்டது. வித்தியாசாலைக்குத் தேவையான நவீன கற்றல் உபகரணங் களும், விளையாட்டு சாதனங்களும். பழைய மாணவர் களினாலும், நலன்விரும்பிகளினாலும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பாடசாலையின் அமைவிடத்தை அனைவரும் அறியும் வண்ணம் 2020இல் முருகண்டி அறக்கொடை நிதியத்தினூடாக பாடசாலைப் பெயர்ப்பலகை அம்மன் வீதியும், ஆடியபாதம் வீதியும் இணையும் இடத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டில் க.பொ.த (சா/த)ப் பரீட்சையில் மாவட்ட ரீதியிலான பெறுபேறுகளின் அடிப்படையில், எமது பாடசாலை வடமாகாண பாடசாலையின் தரவரிசையில் எட்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக் கது. மாணவர்களின் தேசிய ரீதியிலான கற்றல் அடைவு மட்டத்துடன், இணைபாட விதான செயற்பாடுகளும், சிறப்பாக அமைந்துள்ளது. 2017ஆம் ஆண்டு தொடக்கம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில், எமது மாணவர்கள் தொடர்ந்து 100சித்தியைப் பெற்றுள்ளனர். மேலும் 2020ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 181 புள்ளிகளைப் பெற்ற மாணவன், எமது பாடசாலையிலேயே தொடர்ந்து கல்வி கற்கின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். எமது பாடசாலையின் வெற்றிக்கு அர்ப்பணிப்புமிக்க பாடசாலை ஆளணி பெரிதும் உறுதுணையாக உள்ளது.

2017இல் முதன்முதலில் சாரணர் துருப்பு உருவாக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டது. சாரணர் துருப்புக்கான இரண்டு கூடாரம் மற்றும் சீருடைகள் முருகண்டி அறக்கட்டளை நிதியத்தினால் வழங்கப்பட்டது. எமது சாரணர் துருப்பு பல்வேறு போட்டிகளிலும், பாசறைகளிலும் கலந்து வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளது. நல்லூர் சுகாதார வைத்திய பணிமனையும் நல்லூர் பிரதேச செயலகமும் இணைந்து நடாத்திய டெங்கு நோயற்ற பாடசாலைச் சூழல் போட்டியில், 2018இல் இரண்டாம் இடத்தையும், முதலாம் இடத்தையும், டெங்கு நோய் கட்டுப்பாடு தொடர்பான ஒளிப்படத்தில், இரண்டாம் இடத்தையும், கழிவுப் பொருட்களைக் கொண்ட உருவாக்கப்பட்ட புத்தாக்கத் திறன் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக்கொண்டதுடன், யாழ் மாவட்டத்தின் சுகாதாரமான முதன்மைப் பாடசாலையாகவும் தெரிவுசெய்யப்பட்டமை பெருமையுடன் குறிப்பிடத் தக்கதாகும்.

எமது பாடசாலை மாணவர்களின் உடல்வள மேம்பாட்டினைக் கருத்தில் கொண்டு 2018 மே 18ம் திகதி தொடக்கம் எமது பழைய மாணவர் திரு.இராமநாதன் சத்தியநாதன் அவர்களின் அனுசரணையுடன், பாடசாலை மாணவர்களுக்கு காய்ச்சிய பசும்பால் வழங்கப்படுகின்றது. மாணவர்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்குவதற்காக யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தினூடாக நீர் சுத்திகரிப்பு யந்திரமும் பொருத்தப்பட்டுள்ளது. மேலும் கல்வியில் நாட்டமுள்ள பொருளாதார நலிவுற்ற மாணவர்களுக்கு பல்வேறு நிதிநிறுவனங்களுடனும், நலன்விரும்பிகளுடனும் தொடர்புகொண்ட நிதிசார் ஊக்குவிப்புக்களும் வழங்கப்படு கின்றது.

எமது வித்தியாசாலையினால் கால்கோள் விழா, சமய விழாக்கள், வருடாந்த விளையாட்டுப் போட்டி, சுற்றாடல் தின விழா, பரிசில் தினம், ஆசிரியர் தினம் என்பன பழையமாணவர்களினதும் நலன்விரும்பிகளினதும் அனுசரணையுடன் வெகு சிறப்பாக நடாத்தப்படுகின்றது.

எமது பாடசாலை கற்றல் செயற்பாடுகளில் மட்டுமன்றி சமூகம் சார்ந்த செயற்பாடுகளிலும் ஈடுபாடு கொண்டதாகக் காணப்படுகின்றது. பாடசாலைச் சூழலில் உள்ள இளைஞர்களை ஒன்றிணைத்து, ஸ்பாட்டன் விளையாட்டுக் கழகத்தை உருவாக்குவதற்கு வழிகாட்டி, சமூகத்தில் நற்பிரசைகளை உருவாக்குவதிலும் முன்னுதாரணமாகத் திகழ்கின்றது. 2020 கொரோனா பேரிடர் காலத்தில் முருகண்டி அறக்கொடை நிதியம், திரு இராமநாதன் சத்தியநாதன், திருமதி பத்மினி பூபாலசிங்கம், யாஃ கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் இலண்டன் கிளை, கோண்டாவில் அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையம் மற்றும் விளையாட்டுக் கழகம் ஆகிய தனிநபர் மற்றும் நிறுவனங்களினூடாக பொருளாதார நலிவுற்ற பெற்றோர்களுக்கு உலர்உணவு வழங்கி தனது சமூகப் பணியையும் சிறப்பாக செயற்படுத்தியது.

பாடசாலை சமூகத்தின் குறிகாட்டி என்ற வகையில் எம்மிடம் உள்ள வளங்களை முன்பள்ளி மாணவர்களின் நுகர்வுக்கும் வழங்கும் வகையிலும், சின்னஞ்சிறு மழலைகள் சிறந்த அரங்க அனுபவத்தைப் பெற்று மகிழ்வுறும் வகையிலும் சிறுவர் கலைநிகழ்வு 2019 ஆம் ஆண்டு வலய ரீதியில் முதன்முதலாக, எமது வித்தியாசாலையில் ஒழுங்கமைத்து நடாத்தப்பட்டது. முதலில் முன்பள்ளிகளிடையேயான கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டது. இந்நிகழ்விற்கு யாழ் வலய முன்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு க. கணேசலிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராகவும், நல்லூர் முன்பள்ளிகளின் கோட்ட இணைப்பாளர் திருமதி க. சுதர்சனன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர். கலைநிகழ்வில், கலந்து கொண்ட அனைத்துச் சிறார்களுக்கும் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொண்ட முன்பள்ளிகளுக்கு வெற்றிக் கேடயங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் உபசரணை வழங்கி சிறப்பிக்கப்பட்டது. மேலும்நல்லூர்க்கோட்டத்தின்முன்பள்ளிகளுக்கிடையேயான மழலைகள் கலைநிகழ்வும், எமது வித்தியாசாலையில் இடம்பெற்றது. எமது பாடசாலை சமூகங்களுக்கு முன்னுதாரணமாக திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.


பாடசாலை சமூகத்தின் கண்ணாடி என்பதற்கிணங்க, எமது பாடசாலை மாணவர்களினது சமூக, கலாசார, பொருளாதார தேவைகளைப் நிறைவு செய்து, மாணவர்களை நல்வழிப்படுத்தும் செயற்பாட்டில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

“மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்”

திருச்சிற்றம்பலம்

# ஈழத்து சித்தர்கள்:
# தவத்திரு யோகர் சுவாமிகள்

**பேச்சை இழந்த பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தர் அவர்களை மீண்டும் பேசவைத்த அற்புதம்**



**(யோகர் சுவாமிகள் கடந்த மாத தொடர்ச்சி)**

ஒரு முறை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சொற்பொழிவு ஆற்றுவதற்காக பல்கலைச் செல்வர் வைத்தியர். தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், வைத்தியர். டி. எம். பி. மகாதேவன், நான் ஆகிய மூவரும் சென்றிருந்தோம். அமைச்சர் நடேசன் அவர்கள் வீட்டில்தங்கி இருந்தோம். திரு. தெ.பொ. மீயும் நானும் சுவாமிகளிடம் செல்லும் வாய்ப்பை முன்னரே பெற்றிருந்தோம். திரு. மகாதேவனுக்கு இது புதிய அனுபவம். நான்கு நாட்களும் சொற்பொழிவுகள் முடிந்தவுடன் சுவாமிகளிடம் சென்று ஒருமணி நேரம் தங்கி அவர்களின் அருள் பெற்றுத் திரும்புவது வழக்கம். முதல் மூன்று நாட்களிலும் பல திருவிளையாடல்களை சுவாமிகள் செய்தருளினார்கள். திரு. மகாதேவன் ஏதாவது பலகாரம் செய்து சுவாமிகளுக்கு அதை நிவேதனமாகப் படைத்து விட்டு அவர் உண்ட மிகுதியை நாங்கள் உண்ண வேண்டுமென்று விரும்பினார். அமைச்சர் நடேசனாரிடம் இதைச் சொல்ல அவர் சமையற்காரனை அழைத்து, “ஏழு அல்லது எட்டுமணிக்கு குளித்துச் சுத்தமாக இடியப்பமும் சொதியும் தயார் செய்து வை” என்று உத்தரவிட்டார்.

மகாதேவனிடம் திரும்பி, “உங்கள் ஆசைக்காக இதனைச் செய்யச் சொல்லி விட்டேன். சுவாமிகள் எதையும் வாயிற்போட்டு நானறியேன். இருந்தாலும் இப்பலகாரத்தை எடுத்துக் கொண்டு சென்று உங்கள் விருப்பத்தை விண்ணப்பம் செய்யுங்கள். சுவாமிகள் மறுத்துவிட்டால் அதற்காக வருந்தவேண்டாம்” என்று கூறினார் நடேசனார். திடீரென்று ஓர் அற்புதம் நிகழ்ந்தது. நான்கு மணிக்கு அமைச்சர் உட்பட நாங்கள் நால்வரும் கல்லூரிக்குப் புறப்படத் தயாராக இருந்தோம். சமையற்காரனுக்கு திடீரென்று காக்கைவலி வந்துவிட்டது. அவனை மருத்துவமனை அனுப்பிவிட்டு நாங்கள் சொற்பொழிவுக்குச் சென்று விட்டோம். எங்களுக்கே உணவில்லாத போது சுவாமிகளுக்கு நிவேதனம் கொண்டு செல்வதென்பது நடக்காமல் போய்விட்டது.


எங்களுக்குக் கொடுத்துவைக்கவில்லை என்ற மனவருத்தத்துடன் பத்துமணியளவில் நாங்கள் மூவரும் சுவாமிகளிடம் சென்று வீழ்ந்து வணங்கிவிட்டு நின்றோம். திடீரென்று சுவாமிகள் “அடே மகாதேவா! யோகனுக்குச் சாப்பாடு போடவேண்டுமென்று நினைத்தாயல்லவா? கவலைப்படாதே என்று கூறிவிட்டு மூவரையும் அமருமாறு செய்தார்கள். திடீரென்று குடிசையில் ஒரு மூலையைச் சுட்டிக் காட்டி, “டேய் பொடியா! அங்கே இடியப்பமும் சொதியும் இருக்கிறது. நான்கு இலைகள் இருக்கின்றன எடுத்துப் போடு” என்றார்கள். சுவாமிகளுக்குப் படைக்கப்பட்ட இலையில் இருந்த இடியப்பத்தை நன்கு பிசைந்து கடுகளவு தம்முடைய திருவாயில் போட்டுக் கொண்டு எஞ்சியவற்றை உருண்டைகளாக உருட்டி எம்மூவர் இலைகளிலும் போட்டு உண்ணுமாறு பணித்தார்கள். இவை முடித்த பிறகு திடீரென்று, “டேய் மகாதேவா! நீ என்ன செய்யப் போகிறாய் நாளைக்கு?” என்றார்கள். அவர் தெ. பொ.மீயும், தானும் மறுநாள் காலை விமானத்தில் சென்னை செல்லப் போவதாகக் கூறினார்கள். நான் கொழும்பு செல்லப் போவதாகக் கூறினேன். சுவாமிகள் சிரித்துக் கொண்டே, “அடே பொடியா, இவர்கள் இருவரும் பறவை மாதிரி கைகளை இறக்கையாக பரப்பிக் கொண்டு பறக்கப் போகிறார்கள் தெரியுமா?” என்றார்கள். எங்கள் வயிற்றில் புளியைக் கரைத்து விட்டது. இவர்களைப் போக வேண்டாமென்று சுவாமிகள் கூறுகின்றார்களா என்ற சந்தேகம்.

சுவாமிகளின் எதிரே வருகின்ற பெரியவர்கள் பிரதம மந்திரியிலிருந்து சாதாரண மனிதர் வரை யாரும் பேசுவதில்லை. தொடக்கத்திலிருந்தே அவர்கள் எதிரே பேசும் உரிமையை எனக்கு வழங்கியிருந்தார்கள். நான் பேசாது இருந்தாற்கூட, “டேய் பொடியா! ஏன் சும்மா இருக்கிறாய்? ஏதாவது சொல்” என்றார்கள். அந்த உரிமையை வைத்துக் கொண்டு, “இப்பொழுது இவர்கள் பயணத்தை நிறுத்தி விடட்டுமா?” என்று கேட்டேன். சுவாமிகள் சிரித்துக் கொண்டு “அவர்கள் போவதை யோகன் ஏன் நிறுத்த வேண்டும். பறவை போலப் பறப்பார்கள்” என்று கூறினார்கள். சுவாமிகளை விட்டு வரும்போது நடுநிசி ஆகிவிட்டது. நடந்தவற்றைக் கூறியவுடன் அமைச்சர் நடேசனார், இவர்களைப் போகவேண்டாமென்று எவ்வளவோ கூறிப் பார்த்தார். இருவரும் கேட்பதாக இல்லை. வேறு வழியில்லாமல் மறுநாள் காலை ஏழேகால் மணிக்கு இவர்கள் இருவரையும் வழியனுப்ப அமைச்சரும் நானும் சென்றோம். இருவரும் விமானத்தில் ஏறி அமர்ந்து விட்டனர். ஓடு பாதையின் தொடக்கத்திற்குச் சென்ற விமானம் பல முறை விசிறிகளையும் சுழலவிட்டுக் கொண்டிருந்ததைக் காணமுடிந்தது. அது ‘டக்கோட்டா’ விமானம். சிறிது நேரத்தில் ஒலிபெருக்கியில் பின்வருமாறு பேசப்பட்டது. “விமானம் பழுதடைந்து விட்டதால் இன்று சென்னை செல்லும் வாய்ப்பு இல்லை. நாளை இதே நேரத்திற்கு இதே பயணச்சீட்டுகளுடன் பயணிகள் வரலாம்” விமானத்தைக் கட்டி இழுத்துக் கொண்டு வந்தார்கள்.

தெ. பொ. மீயும், மகாதேவனும் கீழிறங்கினார்கள். அமைச்சர் நடேசனுக்கு பெரிய ஆனந்தம், மகாதேவனுக்கு வருத்தம். வழக்கம்போல் அன்று மாலை சுவாமிகளைக் காணச் சென்றோம். சுவாமிகள் சிரித்துக் கொண்டே, “என்னடா மகாதேவா! இறக்கையை விரித்துப் பறக்கவில்லையோ!” என்றார்கள். மகாதேவன் அவர்கள் கண்ணீர் ததும்ப விழுந்து வணங்கிவிட்டு, தான் அவசரப்பட்ட காரணம் கூறினார். அன்று சென்னை போயிருந்தால் நான் இரவு டில்லி சென்று விமானம் மூலம் கவாய்த் தீவில் உள்ள ஆனலுலுவுக்குச் செல்ல வேண்டும். மறுநாள் அங்கு நடைபெறப் போகும் அகில உலக வேதாந்த மகாநாட்டிற்கு நான் தலைமை வகிக்க வேண்டும். அதற்கு எல்லாம் கெட்டுவிட்டது” என்று வருந்தினார். அதைக் கேட்ட சுவாமிகள், “கவலைவேண்டாம். மகனே. இம் மகாநாட்டை பதினைந்து நாள் தள்ளிப் போட்டு விட்டார்கள். நீ அமைதியாகச் சென்று தலைமை ஏற்று நடத்தலாம்” என்று கூறினார்கள். சுவாமிகளிடம் விடை பெற்று வந்து நடேசன் வீட்டில் தங்கியபோது மகாதேவன் கூறிய வார்த்தைகள் துயரத்தை எடுத்துக் காட்டின.


“இந்த மாநாடுகள், ஒரு வருடத்திற்கு முன்பே அட்டவணை போட்டுத் தயாரிக்கப்பட்டவையாகும். உலகம் முழுவதிலிருந்தும் பலர் வருவார்கள். ஆகையால் இரண்டுநாள் முன்னர் அதை மாற்றுவது இயலாத விடயம்” என்று கூறி வருந்தினார். மறுநாள் அவர்கள் இருவரும் சென்னை சென்றனர். நான் கொழும்பு சென்று பதினைந்து நாட்கள் தங்கிவிட்டு, சென்னை வந்து ஒருமாதம் கழிந்தபின் வைத்தியர் மகாதேவனைச் சந்தித்தேன். நாத்தழுதழுக்க, சுவாமிகள் அவர்கள் எவ்வளவு பெரிய சித்தர் என்பதை அனுபவித்து விட்டேன். அங்கே விமானம் தடைப்பட்ட நேரத்தில் சென்னையில் என் வீட்டிற்கு ஒரு அதே தந்தி வந்திருந்தது. பதினைந்து நாட்கள் மகாநாடு பல்வேறு காரணங்களால் தள்ளிவைக்கப்பட்டதென்றும், பதினாறாவது நாள் விழாத் தொடங்குமென்றும் தந்தியில் அறிவித்து இருந்தார்கள். அப்படியே பதினாறாவதுநாள் தொடங்கிய விழாவில் தலைமையேற்று என்பணி முடித்து வந்துவிட்டேன்” என்று கூறினார்கள். யோகர் சுவாமிகள் என்ற சித்தரிடம் நாங்கள் அனுபவித்த இந்த நிகழ்ச்சி அவர் யாரென்பதை எடுத்துக்காட்ட உதவும்.

மேலே கூறிய இரண்டு நிகழ்ச்சிகளிலும் உடனிருந்து சுவாமிகளின் யோகசித்தியையும், பத்தர்களுக்கு அருளுகின்ற திறத்தையும் என்னால் காண முடிந்தது. இனி நான் சொல்லப்போகும் நிகழ்ச்சி எனக்கு நேரடியாக நேர்ந்த அனுபவமாகும். சுவாமிகள் இருக்கும் காலத்திலேயே இதுபற்றி எழுதவேண்டுமென்று ஈழகேசரி, தினகரன் போன்ற பத்திரிகைகள் வேண்டியும், மகானின் உத்தரவில்லாமல் அதைச் செய்ய முடியாதென்று கூறிவிட்டேன். இப்போது அதனை எழுதுவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவது அப்பெருமகனார் முத்தியடைந்து விட்டார். இரண்டாவது என்னுடைய வயதும் எண்பதைக் கடந்து விட்ட காரணத்தால், பின்னர் வரும் சமுதாயம் எத்தகைய அருளாளர்களை இந்தத் தமிழினம் பெற்றிருந்தது என்பதை அறிந்துகொள்ள ஒரு வாய்ப்பாக இருக்கும் ஆதலால் தான் இதனை விரிவாக எழுத முற்பட்டேன்.



*1955* வாக்கில் யாழ்ப்பாணத்தை அடுத்துள்ள கரணவாய் தெற்கு என்ற ஊரில் பத்துநாட்கள் தொடர்ந்து சொற்பொழிவு செய்வதாக ஒப்புக் கொண்டு சென்றேன். மலாய்நாட்டு ஓய்வூதியம் பெறும் முருகப்பு என்பவர் வீட்டில் தங்கியிருந்தேன். பகல் முழுவதும் வேலையில்லை ஆதலாலும், இரவு ஒரு மணிக்கு சொற்பொழிவு தொடங்குவதாலும் அன்பர்கள் சிலர் எனக்காக ஒரு காரைக் கொடுத்து பகலில் எங்குவேண்டுமானாலும் போய் வர ஏற்பாடு செய்தார்கள். முதல்நாள் சொற்பொழிவு முடிந்து வழக்கம் போல் சுவாமிகளிடம் சென்று வணங்கி வழிபட்டு இரவு மீண்டு விட்டேன்.

மறுநாள் பொழுது விடிந்தவுடன் பல்தேய்த்துக் கொண்டு நின்றேன். நண்பர் முருகப்பு வாலாயமாகக் கேட்கின்ற “நன்கு உறங்கினீர்களோ ஐயா” என்ற கேள்வியைக் கேட்டார். அவருக்கு பதில்கூறத் தொடங்கினேன். ஆனால் வாயிலிருந்து ஒரு சொல்லும் வரவில்லை. காற்றுத்தான் வெளிவந்தது. எவ்வளவு முயன்றும் ஒரு எழுத்தைக்கூட உச்சரிக்க முடியவில்லை. அதிர்ந்துபோன நான் என்னசெய்வது என்றறியாமல் திகைத்தேன். ஒன்பது மணியளவில் காரை நானே ஓட்டிச்சென்று சாவகச்சேரியில் ஓய்வுபெற்றிருந்த தொண்டை, காது, மூக்குநோய் நிபுண வைத்தியரைக் காணச்சென்று என் குறையை அவரிடம் எழுதிக் காட்டினேன். அவரிடம் எழுதிக் காட்டும் பொழுது குரல் நாண் முடக்கம் என்பதை ஆங்கிலத்தில் (Paralysis of Vocal chord) எழுதிக்காட்டினேன். அவர் குறையை சோதனை செய்துவிட்டு இன்று மாலை உங்களுடன் ஒருவரை அனுப்புகிறேன். கொழும்பில் சென்று சில சோதனைகள் நடத்திய பிறகு மருத்துவம் செய்யலாம் என்று கூறினார்.



கொழும்புத்துறையில் சுவாமியின் குடில்

அவருடைய வாக்கை ஏற்றுக்கொண்டு மாலை கொழும்பு போவதற்குத் தயாராக காரில் ஏறி அமர்ந்தேன். கண்ணீர் மாலை மாலையாக வந்தது. காரணம் என் பிழைப்பே வாயின் மூலம்தான் நடைபெற்றது. கல்லூரிப் பேராசிரியர், தொடர்ந்து சொற்பொழிவு செய்பவர் என்ற இரண்டும் போய் விட்டனவே. என்னுடைய பெரிய குடும்பம் என்னாவது என்ற கவலை மனம் முழுவதையும் சூழ்ந்து கொண்டது. இந்த நிலையில் காரை ஆயத்தப்படுத்த சாவியைச் செருகிய நிலையில் அந்த மருத்துவ நிபுணர் வெளியே வந்து காரின் கதவைப் பிடித்துக் கொண்டு, “அ. ச. ஐயா! யோகருடைய சீடர்தானே தாங்கள். அவரைப் போய்ப் பாருங்களேன்” என்றார். அந்த விநாடிவரை சுவாமிகளின் நினைவே என்மனத்தில் தோன்றவில்லை.


அவர் கூறியவுடன் சுவாமிகளிடம் செல்லப்புறப்பட்டேன். அக்காலத்தில் பகலில் யாரும் சுவாமிகளிடம் செல்வதில்லை, அவருடைய தியானம் முதலியவற்றிற்கு இடையூறாக யாரும் போவதில்லை. மாலை ஆறுமணிக்கு மேற்தான் செல்வார்கள். அனைவருக்கும் தெரிந்த இந்தச் செய்தி எனக்கும் தெரிந்திருந்தது. எனவே, ஒரு விநாடி சிந்தித்து உடனடியாக சுவாமிகளிடம் போவதே சரி என்ற முடிவிற்கு வந்தேன். நேரே வண்டியை ஓட்டிச் சென்று ஆச்சிரமத்தின் பக்கத்தில் நிறுத்திவிட்டு எதிரே உள்ள கேணியில் கைகால்களைச் சுத்தம் செய்து மகானின் குடிலுக்குள் நுழைந்தேன். அடக்கமுடியாத அழுகையும், கண்ணீரும் என்னை ஆட்கொண்டிருந்தன. விழுந்து வணங்கிய நான் எழுந்திருக்க விரும்பவில்லை. ஓரிரு நிமிடங்கள் கழித்து, “ஏண்டா பொடியா. அந்த மருத்துவர் என்ன முருகன் என்ற நினைப்பா? எதற்காக அவரிடம் போனாய்?” என்று திட்டியதோடல்லாமல் என்னுடைய அறியாமை பற்றியும் வெகுவாக ஏசினார்கள், கடைசியில் “பொடியா இங்கே உட்கார்” என்று நான் வழக்கமாக அமரும் இடத்தைக் காட்டினார்கள். அப்பொழுது இருந்த மனநிலையில் சுவாமிகள் பேசியது எதுவும் என் மனத்திற் படியவில்லை. ஏதேதோ பேசிவிட்டு அரைமணி கழித்து அவர்கள் சொல்லிய வார்த்தைகளை ஏறத்தாழ அப்படியே கீழே தந்துள்ளேன். ஒரு சில சொற்கள் முன்பின்னாக இருக்கலாம்.

இத்தனை ஆண்டுகள் கழித்தும் அச்சொற்களை மறக்கமுடியவில்லை. காரணம் என்னுடைய வாழ்க்கையில் ஒரு மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்திய சொற்களவை. “பொடியா! வழக்கம்போல் மாலையில் பிரசங்கம் செய்துவிட்டு இங்கே வா” என்று கூறிய சொற்கள் ஒருபெரிய அதிர்ச்சியைத் தந்தன. அப்படியானால் நான் பேசமுடியும் என்பதைச் சுவாமிகள் குறிப்பாக உணர்த்தி விட்டார்கள். எழுந்து விழுந்து வணங்கி விட்டு ‘உத்தரவுப் படியே செய்கிறேன்’ என்றேன். அந்த இரண்டு வார்த்தைகள்தான் அப்பொழுது புதிதாகப் பிறந்த என் வாயிலிருந்து வந்த முதலிரண்டு சொற்கள் ஆகும். என்னை மறந்து, அந்த பெருமானாரின் எதிரே நிற்கும்போது திடீரென்று சுவாமிகள் பின்வருமாறு கூறினார்கள். “பொடியா, சேக்கிழாரையும் கம்பனையும் நாங்கள்தானே வெட்டிப் புதைக்கணும். கவலையில்லாமல் போய் வா” என்றார்கள்.

இதன் பொருள் என்ன என்பதைப் பின்னர் விளக்குகிறேன். வெளியில் வந்து காரை ஓட்டிக் கொண்டு சுவாமிகளிடம் என்னைப் போகுமாறு பணித்த அந்த மருத்துவப் பெருந்தகையைக் காணச் சென்றேன். தெருவிலிருந்தபடியே “டாக்டர்....” என்று பெருங்குரலெடுத்துக் கூவினேன். அந்த முதியவர் வீட்டினிலிருந்து வெளியே வந்து நடுத்தெருவில் சாட்டாங்கமாக விழுந்து என்னை வணங்கினார். சற்றும் எதிர்பாராத இதனைக் கண்ட நான் பெரிதும் அதிர்ச்சியடைந்து. ‘இவ்வளவு முதியவராகிய தாங்கள் என்னைக் கும்பிடலாமா? இது முறையன்று’ என்று கூறினேன். என்னுடைய இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்ட அவர் உள்ளே அழைத்துச் சென்றார். அதே நேரம் அவரின் பணியாளர் இரண்டு விமான டிக்கட்டுகளைக் கொண்டு வந்து அவரிடம் தந்தார். ஏதோ அவருக்கு அந்த டிக்கட்டு என்று நினைத்தேன்.

**(08ஆம் பக்கம் பார்க்க)**

திருவாய்பாடி திருக்கோயில் திருப்பணிகள்




# அரன்பணி எனும் அரும்பணியில் அடியார் விழுதுகளை பரப்பி நிற்கும் அரன்பணி அறக்கட்டளை

உலகத்திலே கால தொன்மையும் சாலப் பெருமையும் உடைய தன்மையன் என்று அறிய வெளிவந்த, இறை அருளிய முடிந்த முடிவே சிவநெறி. அந்நெறியினைப் போற்றி விளங்குபவர்கள், திருவருளின் ஞான அருள் பெற்று, காலந்தோறும் நிலவுலகிற்கு இறைவனால் அனுப்பப் பெறுவர். அவ்வகை உணர்வு பெற்ற ஒருவராய் வந்து தோன்றியவரே! சிவனடியார் திருக்கூட்டத் தலைவர், சிவத்திரு. பவானி தியாகராசர் ஐயா அவர்கள்.

கொங்கு நாட்டில் வாணியாறு, காவிரி ஆறு, அமிர்த்த ஊற்று எனும் நதிகள் கூடும், கூடுதுறையிலே முன்னை தவத்தால் நல்வினைப் பயனால் மூத்த பிள்ளையாய் சிவத்திரு. அய்யாவு அவர்களுக்கும், தெய்வத்திருமதி. கண்ணம்மாள் அவர்களுக்கும் தோன்றினார். அவருக்கு பெற்றோர் சூட்டிய திருப்பெயர் தியாகராசன். பிள்ளைப் பருவம் தொட்டு விடலைப் பருவம் வரை, பண்ணார் மொழியம்மை உடனாய் திருநணாவுடையார் திருக்கோயிலிலே தந்தையாருடன் இணைந்து, சரியை திருப்பணியில் ஆழ்ந்திணைந்தார். பள்ளிப் படிப்பை முடித்து, கல்லூரி செல்லும் போது உலகியல் கல்வியின் நற்பயன் அரிதென உணர்ந்து, மெஞ்ஞானக் கல்வியிலே நாட்டம் கொண்டு, பேராசிரியர் முனைவர், சிவத்திரு. வையாபுரியார், பேராசிரியர் முனைவர். சிவத்திரு. சென்னியப்பனார் போன்ற சான்றோர் பெருமக்களிடத்து சமய மெஞ்ஞானம் பெற்றார்.

திருமதி. கீதா என்னும் சேரநாட்டு மங்கையினை மணங்கொண்டார். வழுவாது திருநணா அறுபத்து மூவர்க்கும், திருவிளக்கிடும் திருப்பணியை தினந்தோறும் செய்து வருபவர். பெருமான், இருவருக்கும் நமசிவாயம் என்னும் திருமகவு அருளினார். அருட்குருநாதர் ஒளியகம் சிவத்திரு. ஆடலரசு ஐயா அவர்களிடம் சமயதீக்கையும், ஒளியகம் சிவத்திரு. ஒளியரசு ஐயா அவர்களிடம் விசேடம், நிர்வாண தீக்கை, ஆசாரிய அபிடேகமும் பெற்று, அன்றாடம் சிவ பூசையினை முறைப்படி ஆற்றி வருபவர்.

யான் பெற்ற பேறு இவ்வையகமும் பெறவேண்டுமென எண்ணி, திருக்கோயிலுக்கு வரும் சிறார்களில் ஆர்வலர்களுக்கும், ஆர்வம் மிக்கோர்க்கும், சமய சாத்திர வகுப்புகளையும், சித்தாந்த வகுப்புகளையும், திருவாசகம், திருமுறைகளையும் கற்றுக் கொடுத்து வந்தார். ஐயாவிடம் திருமுறை கற்றோர் சித்தாந்த வகுப்பு நடத்தியும், திருமுறை கல்வியை கற்றுக் கொடுத்தும் வருகின்றனர். “உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல்” என்ற வள்ளுவன் சொல்லுக்கிணங்க, மாற்று கருத்துடையவர்களின் கருத்துகளையும் குறையாக கூறாமல், எம் சமய கொள்கைகளின் கருத்துக்களின் பெருமையை மட்டும் கூறும் நற்குணம் கொண்டவர்.

“திசையனைத்தின் பெருமையெல்லாம் தென்திசையை வென்றேற அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வெல்ல” என்ற சேக்கிழார் சுவாமிகளின் வாக்கினை ஏற்று, தீந்தமிழ் மரபே தலைசிறந்தது என்பதை உணர்த்தும் வண்ணம், எமது மரபு வழிபாட்டினை வலியுறுத்துவது மட்டுமல்ல, திருக்கூட்ட அன்பர்களோடும் இணைந்து ஆற்றி வருகின்றார். தமிழகம் முழுவதுமன்றி, கடல் கடந்து தமிழர் வாழும் நாடுகள் தோறும் திருமுறைச் சிந்தனைகளை விதைத்தும், சித்தாந்த உண்மைகளை வகுப்பு வழி உரைத்தும் வருகிறார். பல்காலும் சமயத்தொண்டிலே தோய்ந்தமையால், அவருக்கு திருக்கோயில் திருப்பணியாற்றும் திருவருள் நல்கி உள்ளார்.

தம்பிரான் தோழர் அவதாரம் புரிந்த திருவிடத்தை கற்றளியாக அமைக்கும் நற்பேறு அமையப் பெற்றார். சற்றொப்ப இருபது நூறாயிரத்திலே தொடங்கி நிறைவு செய்ய நினைத்த திருப்பணிகள், இன்று சற்றொப்ப ஏழு கோடியைக் கடந்து சிறந்தடியார் பங்குடன் இனிதே நடந்து வருகின்றது. பல இன்னல்கள் இடர்பாடுகளை திருவருள் முன்னிற்க வெற்றி கொண்டு, நம்பியாரூரர் திருக்கோயில் கடவுள் மங்கல நன்நீராட்டினை தீந்தமிழ் மந்திரங்கள் ஓதி தடை வந்த போதும் முன்னவனே! முன் நிற்க, அறங்கூறும் அவையத்து அறவரசர் நீதி விளம்ப, அருட்குருநாதர் சிவத்திரு. ஒளியரசு ஐயா அவர்கள், முனைவர் சிவத்திரு. சென்னியப்பனார் மேலும் பல சைவ சமயச் சான்றோர் பலர் முன்னிலையிலே குடமுழுக்கு பல்லாயிர அடியார் பெருமக்கள் புடைசூழ இனிதே நடைபெற்றது.

ஞானப்பிள்ளையாரும், வாக்கின் மன்னரும் (அப்பரும்) சந்தித்த இடமாகிய தஞ்சை மாவட்டம் திருவையாறு வட்டம் சம்பந்தர் மேடு எனும் திருவிடத்தின் வரலாற்றுப் பேறினைப் போற்றும் வண்ணம் கற்கோயில் ஒன்றை அமைத்து திருப்பணி புரிந்த ஐயா! அவர் ஆற்றிய திருப்பணிகள் என நீளுகிறது ஐயாவின் திருப்பணிகள்.





வரதரெட்டியில் மழை வெள்ளத்தில் நனைந்த இறைவன் அரன்பணிக்கு ஆணையிடுதல்

2019களில் இராசஇராச சோழசன் அவர்களின் சமாதி உள்ள இடமாகக் கருதப்படும் பட்டீஸ்வரம் உடையாளூரில் தஞ்சைப் பெரியகோயிலின் மாதிரிக் கோயிலை கட்டுவதற்கு பதியப்பட்ட அமைப்பே அரன்பணி அறக்கட்டளை. எனினும் கோயில் கட்டுவதற்கு தடங்கல்கள் இருந்துவந்ததால் இயங்குநிலையை இழந்திருந்தது. ஐயாவின் பயணத்தின்போது, வழுதரெட்டி எனும் ஊரில் மழை நீரினுள் நனைந்து இருக்க கண்ட சிவலிங்கத் திருமேனியே மீண்டும் அரன்பணி அறக்கட்டளையை சிவனுக்கு கோயில்கள் கட்டுதல், திருப்பணி வேலைகள் செய்தல் எனும் கருத்திற்கு உரமூட்டி தளிர்விடச்செய்தது. நிறைய இடங்களில் பழம்பெரும் சிவலிங்கத் திருமேனிகள் வெட்ட வெளியிலும், மழையிலும், வெயிலிலும் இருப்பது முகநூலிலும், புலனக் குழுமத்திலும் பதிவுகளாக வந்ததை கண்ணுற்று வருந்தியபோது, திருவருள் திறத்தினால் இச்சிவலிங்கத் திருமேனிகளுக்கு மேற்கூரை வேய்ந்து, கூடம் அமைத்து வைக்கக் கூடாது என்ற எண்ணம் பவானி தியாகராசன் ஐயாவின் மனதில் தோன்றியது.

இதுகாறும் நடந்த திருப்பணிகளுக்கு நிதியளித்தவரே, மீண்டும் மீண்டும் பொருள் கொடுக்க நினைத்து, தொகை அதிகம் கொடுத்து, திருப்பணிகள் செய்ய பலர் இருப்பினும், எவ்வகையினரும் பங்கு பெற்றுக் கொள்ள வேண்டுமென்று எண்ணி, ஒரு சிறு தொகையை, ஒரு நபருக்கு ரூபாய் 100 என தீர்மானித்து, “ என் கடன் பணி செய்து கிடப்பதே” என்ற அப்பர் சுவாமிகள் திருவாக்கில் அருட்குருநாதர் சிவத்திரு. ஒளியரசு ஐயா அவர்களின் ஆசியில் மற்றும் தலைமையில், பவானி தியாகராசர் ஐயா அவர்கள் ஆலமரமாக நிற்க, அதில் விழுதுகளாக அமைப்பாளர்களை அமைத்து, அரன்பணி அறக்கட்டளையை பரவச்செய்தார். அவர் எதிர்பார்த்தது, ஆயிரம் பேர் இணைவார்கள் மாதம் ஒரு நூறாயிரம் ரூபாய் சேர்த்து, மேற்கூடம் அமைத்துக் கொடுக்கலாம் என்று. ஆனால், திருவருள் முன்னிற்க தைத்திங்கள் மட்டும் இத்திருப்பணியில் இணைந்தவர்கள் 6500 அன்பர்கள்.

சிறுதுளி பெருவெள்ளமாவது போல இது மிகப்பெரிய ஊக்கத்தைக் கொடுத்து, அரன்பணி அறக்கட்டளையை சற்று விரிவுபடுத்த இறைவன் திருவருள் கூட்டியது. அருட்குருநாதர் அவர்களின் அறிவுரையின் கீழ் அரன்பணி அறக்கட்டளையின் பணிகளாக நான்கு திட்டங்கள் தொடுக்கப்பட்டது.

1. **வெட்ட வெளியில் உள்ள சிவலிங்கத் திருமேனிகளுக்கு தகரக்கூடம் அமைத்துக் கொடுத்தல்.**

2. **வழிபாடுகள் நடக்கும் மற்றும் ஊர் மக்களின் ஆர்வத்தைப் பொறுத்து பெருமான் மற்றும் அம்மைக்கு கருவறை, ஒருநிலை அர்த்தமண்டபம் அமைத்தல்.**

3. **பழமையான சிவாலயங்களுக்கு அந்த பழமையை மாறாமல் கோயிலை அவ்வாரே புதுப்பித்தல்.**

4. **கோயில்களை பராமரிப்பது மற்றும் கோயில்களை சுத்தமாக வைத்திருப்பது, மின்சார பணிகள் மற்றும் தண்ணீர் வசதி செய்வது, மண்டபங்கள் பாழடைந்த நிலையில் தோன்றாமல் இருக்க அதற்கு தேவையான வர்ணம் பூசி பாதுகாத்தல், சாமிக்கு ஆடைகள் சாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்து தர திருவருளும் குருவருளும் கூட்டியுள்ளது.**

பல அன்பர்கள் விரும்பி இணைய வைகாசித்திங்கள் சுமார் 10,500 அன்பர்கள் இணைந்தார்கள். திருவருள் துணைகொண்டு, திருப்பணிகளும் துரிதமாக நடைபெற்று வருகின்றன. கூரை அமைக்கும் திட்டத்தில் அயன்வேலூர், அத்தியூர், கீழக்குப்பம் வேலூர் மற்றும் மோட்டத்தூர் ஏரிக்கரை சிவலிங்க திருமேனிகள், தஞ்சை கொடியாலம், இடைஇருப்பு, திருவையாத்துக்குடி சிவலிங்க திருமேனிகளுக்கு தகரக்கூடம் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. கருவறையும் ஒருநிலை விமானமும் அமைக்கும் திருப்பணியில் பொன்மான் வேய்ந்த நல்லூர், காக்கா கோட்டூர், கோடுகிழி, பூதூர், நறுவெளி போன்ற தலங்களில் திருப்பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றது. பழமையான ஆலயத்தை, அப்பழமை மாறாமல் புதுப்பித்தல் என்ற நோக்கத்தில் திருவாரூர் உருத்திரகோடீசுவரர் ஆலயம் முழுமையும் புதுப்பித்தல் பணி நடந்து வருகின்றது. திருக்கோயிலை பராமரித்தல் என்ற திட்டத்தில் சண்டேசநாயனார் முத்தி தலமான திருவாப்படி தலத்தில் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க திருப்பணிகள் நடத்திக்கொடுக்கப்பட்டது.

“ஆலயம் தொழுவது சாலவும் நன்று” என்பது ஔவையின் பொன்மொழி, “தென்னாடுடைய சிவனே போற்றி” என்பது மாணிக்கவாசகர் வாக்கு, “மாதவம் செய்த தென்திசை” என்பது பெரியபுராணத்தில் சேக்கிழார் வாக்கு, தமிழகம் தெய்வத் தன்மையோடு சேர்ந்து இருக்கின்ற பூமி, இங்கு,

(08ஆம் பக்கம் பார்க்க)

சுந்தரர் கோயில்



# கல்வியில் சிறந்து விளங்க, கல்வியில் மேலோங்க ஓதவேண்டிய திருக்கருப்பறியலூர் திருப்பதிகம்

கல்வியில் சிறந்து விளங்க , கல்வி மேலோங்க திருக்கருப்பறியலூரில் உள்ள கோல்வளைநாயகி அம்பாளுடனுறை குற்றம் பொறுத்தநாதப் பெருமானை மனதிலே நினைந்து உளமுருகி திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச்செய்த இரண்டாம் திருமுறை (பதிகம் 2-31 , திருக்கருப்பறியலூர்) "சுற்றமொடு பற்றுஅவை " என்ற பதிகத்தினை, காலை, மாலை இருவேளையும் திருக்கருப்பறியலூர் அப்பனின் திருவடியை நீள நினைந்து , உளமுருகி மெய்யன்போடு பாடுவது, வினைகளை நீக்கி கல்வியில் மேன்மையைத் தரும். உரியவர் பாடினால் இன்னும் சிறப்பாகும். இயலாதவர்களுக்கு அவர்கள் பொருட்டு பெற்றோரோ, உறவினர்களோ பாடுதலும் பலன்தரும்.



இறைவன்: குற்றம் பொறுத்தநாதர் பண்: இந்தளம் (2-31)
இறைவி பெயர் : கோல்வளைநாயகி இராகம்: நாதநாமக்கிரியை

**திருச்சிற்றம்பலம்**

(1) சுற்றமொடு பற்றுஅவை துயக்குஅற அறுத்துக்
குற்றம்இல் குணங்களொடு கூடும்அடி யார்கள்
மற்று அவரை வானவர்தம் வான்உலகம் ஏற்றக்
கற்றவன் இருப்பது கருப்பறிய லூரே.

(2) வண்டு அணைசெய் கொன்றை அது வார்சடைகள் மேலே
கொண்டு அணைசெய் கோலம் அது கோள் அரவினோடும்
விண்டு அணைசெய் மும்மதிலும் வீழ்தர ஓர் அம்பால்
கண்டவன் இருப்பது கருப்பறி லூரே.

(3) வேதமொடு வேதியர்கள் வேள்வி முதல்ஆகப்
போதினொடு போதுமலர் கொண்டு புனைக்கின்ற
நாதன்என நாள்இருள்முன் ஆடுகுழை தாழும்
காதவன் இருப்பது கருப்பறிய லூரே.

(4) மடம்படு மலைக்கு இறைவன் மங்கை ஒரு பங்கன்
உடம்பினை விடக்கருதி நின்ற மறையோனதை
தொடர்ந்து அணவு காலன் உயிர் காலஒரு காலால்
கடந்தவன் இருப்பத கருப்பறிய லூரே.

(5) ஒருத்தி உமை யோடும் ஒருபாகம் அதுவாய
நிருத்தன் அவன் நீதஅவன் நித்தன் நெறிஆய
விருத்தன் அவன் வேதம்என அங்கம் அவை ஓதும்
கருத்தவன் இருப்பது கருப்பறிய லூரே.

(6) விண்ணவர்கள், வெற்பு அரசு பெற்றமகள் மெய்த்தேன்
பண்அமரும் மென்மொழியினாளை அணைவிப்பான்
எண்ணி வரும் காமன்உடல் வேவ எரிகாலும்
கண்ணவன் இருப்பது கருப்பறிய லூரே.

(7) ஆதிஅடியைப் பணிய அப்பொடு மலர்ச்சேர்
சோதிஒளி நல்புகை வளர்க்குவடுபுக்குத்
தீதுசெய வந்துஅணையும் அந்தகன் அரங்கக்
காதினன் இருப்பது கருப்பறிய லூரே.

(8) வாய்ந்த புகழ் விண்ணவரும் மண்ணவரும் அஞ்சப்
பாய்ந்து அமர்செயும் தொழில் இலங்கை நகர்வேந்தற்கு
ஏய்ந்த புயம் அத்தனையும் இற்றுவிழ மேல்நாள்
காய்ந்தவன் இருப்பது கருப்பறிய லூரே.

(9) பரந்து அது நிரந்துவரு பாய்திரைய கங்கை
கரந்து ஓர் சடைமேல்மிசை உகந்து அவளை வைத்து
நிரந்தரம் நிரந்து இருவர் நேடி அறியாமல்
கரந்தவன் இருப்பது கருப்பறிய லூரே.

(10) அற்றம் மறையா அமணர் ஆதம் இலி புத்தர்
சொற்றம் அறியாவதர்கள் சொன்னசொலை விட்டுக்
குற்றம் அறியாத பெருமான் கொகுடிக் கோயில்
கற்று என இருப்பது கருப்பறிய லூரே.

**திருக்கடைக் காப்பு**

நலம்தரு புனல்புகலி ஞான சம்பந்தன்
கலந்தவர் கருப்பறியல் மேய கடவு(ள்) ளைப்
பலம்தரு தமிழ்க்கிளவி பத்தும் இவை கற்று
வலம்தரும் அவர்க்கு வினைவாடல் எளிது ஆமே.

**திருக்கருப்பறியலூர் செல்லுங்கள் :**

உங்களின் அல்லது பிள்ளைகளின் கல்வி மேலோங்கப் பெற்றவர்கள், இயலுமாயின் திருக்கருப்பறியலூர் சென்று, குற்றம் பொறுத்தநாதர் மற்றும் கோல்வளைநாயகி அம்மனை வழிபட்டு, வாழ்வாங்கு வாழ எல்லாம்வல்ல பரம்பொருளின் திருவருள் கைகூடட்டும்.

## அரன்பணி எனும் அரும்பணியில்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

**"யாவர்க்கு மாம் இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம் பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம் பிறர்க் கின்னுரை தானே."**

எனும் திருமூலர் வாக்கிக்கிணங்க, உண்ணப்புகும் பொழுது இறைவனுக்கு ஒரு பச்சிலை சூட்டி வணங்குதலும், பசுவிற்கு வாயுறை புல் குடுத்தலும், வறியர்க்குச் சிறிது சோறிடுதலும், மற்றவரிடம் இன்சொல் பகர்தலும் எல்லார்க்கும் இயல்வனவே! இதுவே தமிழரின் பண்பாடு.

தமிழரின், பண்பாடும், மொழியும் ஆலயம் சார்ந்தே இருக்கின்றது. எம் பெருமக்கள் ஆலயம் சார்ந்து இரு என்றும், கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம், என்றும் கூறியுள்ளனர். திருக்கோயிலை மையமாகக் கொண்டுதான் நமது வாழ்க்கை முறையும், வளமும் சிறக்கும். இவையெல்லாம் இடைப்பட்ட காலத்தில் மறந்து நிற்பதனால், பல கோயில்கள் பேணுவார் இன்றி வெட்ட வெளியிலும், ஏரி ஓரங்களிலும், சிவலிங்கத் திருமேனிகள் மழையிலும் வெயிலிலும் பழுதடைந்து வந்துள்ளன. பழுதடைந்த ஆலயங்களை திருப்பணி செய்து எம் மரபு மாறாமல் காத்து மீண்டும் புதுக்க வேண்டும். இது ஒவ்வொரு சைவத்தவனினதும் கடமை.

**"ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான் திருக் கோயில்க ளானவை
சாற்றிய பூசைகள் தப்பில் தானே"**

நாள் பூசைகள், திருவிழாக்கள் முதலியன எந்தவித முட்டுப்பாடுமின்றி தொடர்ந்து நடைபெறுதல் வேண்டும். எமது திருக்கோயில்களில் பன்னிரு திருமுறைகள் ஓயாது ஒலித்தல் வேண்டும். ஆகமங்களில் சொல்லப்பட்ட முறைதவறி நடப்பின், நாட்டில் தீர்க்கலாகாத நோய்கள் பரவி, மழையும் பொய்த்துப் போகும், அரசருக்கு கேடு உண்டாகும். ஆகவே, எமது கோயில்களை பாதுகாப்பது எம்முடைய


உருத்திரகோடீசுவரர் திருக்கோயில் திருப்பணிகள்

கடமை. சைவ சித்தாந்தம் எதை சொல்கிறதென்றால், நீங்கள் எதை செய்கிறீர்களோ, அவையே உங்களை நோக்கி வரும். நேற்று என்ன செய்திறீர்களோ, அது இன்று கிடைத்திருக்கிறது. இன்று செய்வது நாளை நிச்சயம் வரும்.

நமது முன்னோர்கள் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே, விண்ணைத்தொடும் அளவிற்கு கோபுரம் அமைத்து, கற்கோயில்கள் அமைத்து, பாதுகாத்து வந்தனர். எமது பண்பாட்டையும் மொழியையும் மீட்டெடுக்கும் பொருட்டு, சிதலமடைந்த திருக்கோயில்களை பழமை மாறாமல் சிவப்பணி செய்து, திருவருள் கூட்ட அரன்பணி அறக்கட்டளை உருவானது. ஊராரையும் ஊக்குவித்து, உடையவர் திருக்கோயில் மேம்பட வழி வகுப்பதே "அரன்பணி அறக்கட்டளை"யின் நோக்கமாகும். சிவ பணியில் நாமும் பங்களித்து, பிறவிப்பிணி நீங்கி, திருவடிப்பேறு பெறுவோம்!

சிவாய நம.

**இத்திருப்பணியில் நீங்களும் இணைத்துகொண்டு ஈசனுக்கு கோயில் அமைக்க விரும்பின் தொடர்பு கொள்ளவேண்டிய விபரம். (ஒரு அடியாரிடம் ரூபா 100.00 மட்டுமே)**

**அரன்பணி அறக்கட்டளை**
+91- 81 22 33 89 89
aranpanitrust@gmail.com

## ஈழத்து சித்தர்கள்...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்பெருமகனார் டிக்கட்டை என்னிடம் கொடுத்து படிக்கச் சொன்னார். யாழ்ப்பாணத் திலிருந்து சென்னை செல்வதற்கு என் பெயரிலும், அப்பணியாளர் பெயரிலும் இரண்டு டிக்கட்டுகள் இருந்தன. ஒன்றும் புரியாமல் திகைக்கும் என்னைப் பார்த்து பின்வருமாறு பேசினார்.

"அ. ச. ஐயா! இங்கு செய்த சோதனையி லேயே தாங்கள் எழுதிக் காட்டியது உண்மை என்பதைத் தெரிந்து கொண்டேன். இதற்கு இதுவரை மருத்துவ உலகம் ஒன்றும் செய்யமுடியவில்லை. கோடிக்கு ஒருவருக்கு இது வரலாம். வந்து விட்டால்! அதுதான் உங்களிடம் சொல்லாமல் உங்களை சென் னைக்கு அனுப்ப முடிவு செய்தேன். பேச முடியாத தாங்கள் ஒன்றும் செய்ய முடியாது ஆதலால் இந்த அன்பரையும் உங்களோடு அனுப்ப முடிவு செய்தேன். காரில் உங்களை ஏற்றுகின்றவரை எனக்கும் சுவாமிகளின் நினைவுவரவில்லை. எப்படி உங்களை ஊருக்கனுப்புவது என்ற எண்ணம்தான் என் மனத்தில் மேலோங்கி நின்றது. தாங்கள் வண்டியில் ஏறிய பிறகு வண்டிக் கதவைத் தொட்டுக் கொண்டு, 'நீங்கள் சென்று வாருங்கள்' என்று விடை கொடுக்க முயலும்போதுதான் சுவாமிகளின் எண்ணம் திடீரென்று மனத்தில் தோன்றிற்று. நாற்பது வருடங்களுக்குமேல் காது,மூக்கு மற்றும் தொண்டை நிபுண மருத்துவராக கொழும்பில் பணி செய்த எனக்கு அந்த விநாடி ஓர் எண்ணம் தோன்றிற்று. மருத்துவ உலகம் உதவ முடியாத தங்களுக்கு இறைவனின் அருள் ஒன்றுதான் உதவமுடியும். அப்படியா னால் அந்த அருளை வழங்கக் கூடிய இறைநேசர் சுவாமிகள் ஒருவராகத்தான் இருக்க முடியும். அதனாற்தான் பகலில் யாரும் சுவாமிகளிடம் செல்வதில்லை என்று தெரிந்திருந்தும் தங்களைப் போகுமாறு பணித்தேன். சுவாமிகளே என் மனத்தில் அந்த எண்ணத்தைத் தோற்றுவித்திருக்க வேண்டும். இத்தகைய அற்புதங்கள் பலவற்றை பிறர் அறியாமல் ஒரு சிலருக்கு சுவாமிகள் செய்கிறார்கள் என்பதை தழுதழுத்த குரலில் கூறிவிட்டு, என்னை அங்கேயே தங்கி மதிய உணவு உட்கொண்ட பிறகு போகலாம் என்றும் பணித்தார்கள்.

அன்று மாலை வழக்கம்போல் பேசினேன். பின்னர் சுவாமிகளிடம் சென்று அருள் பெற்றேன். ஏனைய ஒன்பது நாட்களும் இதே முறையில் சுவாமிகளிடம் சென்று வணங்கி வந்தேன். இந்த நிகழ்ச்சி நடைபெற்ற காலத்தில் கம்பனைப் பற்றி "இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும்" என்ற நூலையும், "நாடும் மன்னனும்" என்ற நூலையும் எழுதி வெளியிட்டிருந்தேன். அதன் பிறகு ஏறத்தாழ முப்பது நூல்கள் எழுதியுள்ளேன். என்றாலும் சுவாமிகளின் வாக்குப் பொய்க்கவில்லை. இந்நூல்களில் முக்கால் பங்கிற்கு மேல் கம்பனையும் சேக்கிழாரையும் பற்றிய நூல் களே ஆகும். இவற்றோடு இல்லாமல், எஸ். ராஜம் அவர்கள் வெளியிட்ட கம்பராமாயண மூலத்திற்கு ஆசிரியர் குழுவில் ஒருவனாக இருந்தேன். அடுத்து சென்னைக் கம்பன் கழகம் வெளியிட்ட "கம்ப இராமாயணம்" பதிப்பிற்கு பல்கலைச் செல்வர் வைத்தியர். தெ. பொ. மீ அவர்களுடன் சேர்ந்து பணியாற்றி னேன். சென்ற நான்காண்டுகளாகக் கோவைக் கம்பன் கழகம் வெளியிடும் இராமாயண நூலுக்கும் முதன்மைப் பணிப்பாசிரியனாக இருந்து வருகின்றேன். தஞ்சைப் பல்கலைக் கழகத்தில் துணை வேந்தராக இருந்த வி. ஐ. சுப்பிரமணியம் அவர்கள் எதிர்பாராத விதமாக என்னை அழைத்து சேக்கிழாரைப் பற்றிய விரிவான நூலொன்றை எழுதுமாறு பணித்தார்கள். மூன்று ஆண்டுகள் பல்கலைக் கழகத்தின் ஏற்புப் பணியாக "பெரியபுராணம் ஓர் ஆய்வு" என்ற பெரியதொரு நூலை எழுதி முடித்தேன்.

**திருச்சிற்றம்பலம்**

ஆக்கம் - பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன்
தொகுப்பு - சிவத்திரு. வடிவேலு கங்காளன்



காடவர் கோமான் கட்டிய கைலாசநாதர் கோயில்

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று பெரியபுராணம் மறவாமையால் அமைத்த மனக்கோயில் - பூசலார் நாயனார்



சிவத்திரு.
பா.சிவமாதவன்
புதுக்கோட்டை

உலகின் இறைவன் இல்லாத இடமே இல்லை. அவனே நீக்கமற நிலையாக இருந்து உலகை இயக்கிக் கொண்டிருக்கிறான். அவனின் அருளாற்றலாம், நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உயிர்கள் மலத் தொடர்புகளிலிருந்து நீங்கி, ஈடேற்றம் அடைவதற்காக, இறை அருளை வாரிப்பொழிகிறது.

நமக்காக ஒரு உலகை உருவாக்கி, அதில் அவனும் நம்முடனே தோன்றாத் துணையாக இருந்து, வழி நடத்துகிறான். அப்படிப்பட்ட பரம்பொருளை பல்வேறு விதமாக நாம் வணங்கிக் கொண்ருக்கிறோம். குறிப்பாக இறைவனுக்கென்றுத் தனியாக கோயில் அமைத்து, அங்கு சென்று வழிபாடு செய்கின்றோம். "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது முதுமொழி. எனவே கோயிலேன்பது வெறுமனவே பத்திச் செய்வதற்கான இடம் என்பதை தாண்டி கலைகளை வளர்க்கும் இடமாகவும் இருக்கிறது.

கோயிலை அமைப்பதற்கு பல்வேறு சாத்திர விதிகள் இருக்கின்றன. ஆகம அடிப்படையில் கோயில்களை தமிழர்கள் கட்டியெழுப்பியிருக்கின்றனர். சாதாரணமாக ஒரு சிறிய கோயிலாக அமைப்பதற்கே, நிறைய செலவுகளும் ஆகிறது, பணியாட்களும் தேவைப்படுகிறார்கள். ஆனால் ஒரே ஆளாக ஒருவர், ஒரு கோயிலும் கட்டியிருக்கிறார். அந்த கோயிலுக்கு வருவதற்காக இறைவன் வேறொரு கோயில் குடமுழுக்கை தள்ளி வைக்கச் சொல்கிறார். இறைவனே விரும்புகிறான் என்றால், அது எப்பேற்பட்ட கோயிலாக இருக்க வேண்டும். அந்த கோயில் எங்குள்ளது, அதை கட்டியெழுப்பியவர், யார்? என்பதை அறிய நமக்கு சேக்கிழார் பெருமான் உதவி செய்கிறார். இந்த அரும்பணியை செய்தவர் 'பூசலார்' எனும் அடியவர் ஆவார். அவரைப் பற்றி தெய்வச் சேக்கிழார் பெருமான் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"அடுப்பது சிவன்பாலன் பர்க் கம்பணி செய்தலன்றே
கொடுப்பதெவ் வகையுந்தேடி யவர்கொளக் கொடுத்துக் கங்கை
மடுப்பொதி வேணியையர் மகிழ்ந்துறை வதற்கோர் கோயில்
எடுப்பது மனத்துட் கொண்டா ரிருநிதி யின்மை யெண்ணார்."
- (பெரியபுராணம்: 4174)

அதாவது, சிவன்பால் அன்பு பூண்டவர்களுக்கு எவ்வகையாலும் தேடிக்கொடுப்பார். அடியார்க்கு, ஒரு ஆசை, சிவபெருமானுக்கு அற்புதமான கோயில் அமைக்க எண்ணினார். ஆனால் அவரிடம் அதற்கான நிதி இல்லை. அடியார், எங்கெல்லாம் பொருள் கிடைக்கும் என்று





தேடுகிறார். ஆனால் எதுவும் கிடைக்கவில்லை, வருந்துகிறார். உடனே அவர் மனக்கோயில் கட்ட தீர்மானிக்கிறார். புறச்செல்வம் அவருக்கு புறமாக சென்றது. அகச்செல்வம் அடியாரின் அகத்தே நிறைந்தது, என்கிறார்.

ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்துச் செய்கிறார். ஆலயம் அமையத்தேவையான பொருட்கள், வேலை செய்யும் பணியாட்கள் என மனத்தினுள்ளே தேடி, நல்ல நாளாகப்பார்த்து, சிவாகமங்களில் கூறப்பட்டுள்ளவாறு கோயில் திருப்பணியைத் தொடங்கிறார். அதுவும் இரவு, பகல் பாராது அப்பணியைச் செய்கிறார். ஒரு ஐந்து நிமிடம் மனதை கட்டுக்குள் வைக்க நாமெல்லாம் படாத பாடுபடுகின்றோம். அதற்கு பயிற்சியும் எடுக்கிறொம். பூசலாரோ இரவும், பகலும் மாறா சிந்தனையோடு மகாதேவனுக்கு கோயில் செய்கிறார்.

அடிமுதல் உபான மாதி யாகிய படைக ளெல்லாம்
வடிவுறுந் தொழில்கள் முற்ற மனத்தினால் வகுத்து மான
முடிவுறு சிகரந் தானும் முன்னிய முழுத்திற் கொண்டு
நெடிதுநாள் கூடக் கோயில் நிரம்பிட நினைவால் செய்தார்
- (பெரியபுராணம்)

இது எப்படி சாத்தியம் என்றால்,

"நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்நாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை குன்றாத
உணர்வுடையார் தொண்டராம் குணம்மிக்கார்." - (பெரியபுராணம்: 4153)

அடியார், கோயில் கட்ட ஆகின்ற காலமளவும், மனதிற்குள்ளாகவே ஆலயத்தை முழுவதும் செய்து முடித்து, குடமுழுக்கிற்கான நாளையும் குறிக்கிறார். அதே நாளில் காடவர் கோமானாகிய பல்லவ அரசன், சிவனுக்கு அழகான கற்றளி அமைத்து குடமுழுக்கு நடத்த ஏற்பாடு செய்கிறார். இறைவன், அதற்கு முன்னாள் இரவு மன்னனின் கனவில் பின்வருமாறு கூறுகிறார்.

"நின்றவூர்ப் பூசல் அன்பால் நெடிதுநாள் நினைந்து செய்த
நன்றுநீடு ஆலயத்து நாளைநாம் புகுவோம் நீயிநுக
ஒன்றிய செயலை நாளை யொழிந்துபின் கொள்வா யென்று
கொன்றைவார் சடையார் தொண்டர் கோயில்கொண்டருளப் போந்தார்."
- (பெரியபுராணம் : 4180)

இறைவன் இல்லாத இடமென்பது கிடையாது. ஒரே நேரத்தில் பல இடங்களில் தோன்றியருளும் ஆற்றலுடையவன். ஆனால் மன்னனிடம், நான் என்னுடைய அடியார் அன்பால் செய்த கோயிலுக்குப் போகின்றேன், எனச் சொல்கிறான் என்றால் பூசலாரின் அன்பு எப்படியிருந்திருக்கும். தொண்டரின் அன்பையும், அரும்பெரும் செயலையும் உலகம் அறியும் பொருட்டு எங்குமுள்ள பரமன், அங்கு செல்வேன் என்கிறார்.

மன்னன், உடனே நின்றவூருக்கு ஒடோடி வந்து பூசலார் அமைத்த ஆலயத்தைத் தேடுகிறார். அங்குள்ள மறையோர்களிடம். பூசலார் அமைத்த ஆலயம் எங்குள்ளது என்கிறார். அவர்கள் 'பூசலார், என்பவர் இருக்கிறார். ஆனால் கோயில் எதுவும் கட்டவில்லை' என்கிறார்.

அடியாரிடம் சேர்ந்து, மன்னன் பூசலாரை வணங்கி, நீர் அமைத்த ஆலயத்தை காண இறைச்சொல்லைக் கேட்டு வந்தேன் என்றான். அதற்கு பூசலார்,

"மன்னவன் உரைப்பக் கேட்ட அன்பர்தாம் மருண்டு நோக்கி
என்னையோர் பொருளாக் கொண்டே எம்பிரான் அருள்செய் தாரேல்
முன்வரு நிதியி லாமை மனத்தினால் முயன்று கோயில்
இன்னதாம் என்று சிந்தித்து எடுத்தவா றெடுத்துச் சொன்னார்"
- (பெரியபுராணம்:4185)

அதாவது, அதைக் கேட்டு பூசலார் வியப்படைகிறார். ஏனெனில் இவையெல்லாம் அவருக்கும், இறைவனுக்குமே தெரியும். என்கிறார். இதில் வரும் "என்னையே பொருளாக் கொண்டே எம்பிரான் அருள் செய்தாரேல்" என்ற வரிகள் பூசலாருக்கும், இறைவருக்குமான உறவைக்காட்டுகிறது, அன்பின் ஆழத்தை விவரிக்கிறது. இதே போன்று திருவாசகத்திலும் ஒரு வரி வரும். "நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை" என்பதாகும்.

நடந்ததையெல்லாம் கேட்ட மன்னனும் அடியாரை வீழ்ந்து வணங்கி விட்டு, இருப்பிடம் செல்கிறார். பூசலாரும் நினைத்த படியே குடமுழுக்கும் நடத்தி, தொடர் பூசனை நடத்தி இறைநிழல் அடைகிறார்."நினைப்பவர் மனம் கோயிலாய்க் கொண்டவன்" என்ற அப்பர் பெருமானின் தேவார வரிகள் பூசலாரின் நினைவை நமக்கு பறைசாற்றுவதாக அமைகிறது.எனவே நாமும் இறைவனை அன்பால் நினைப்போம். புறத்தில் அமைக்கமுடியாவிடினும் அகத்திலாவது அரனுக்கு திருக்கோயில் அமைப்போம்.

பூசலார் பற்றி,

திருநின்ற ஊரினிலே சைவநெறிநின்ற அடியவராம்..
மறையவராம் பூசலார் எனும் பெரியவராம்..
பெருங்கோவில் அமைத்திடவே ஒரு வாயில்
வேண்டுமெனஓயாதே நினைத்திருந்தார்

ஒண்பொருளை உணர்ந்திருந்தார்.. புற நிதியும் அதன்
பயனும் வழியடைத்து போயின பின்.. அகநிதியும்
அவனருளால் அற்புதமாய் மலர்ந்திடவும்..வாரா
வழியருள்வான் சேவடியில் சேர்ந்திடவே

ஒரு வழியும் உய்வழியும் ஒற்றுமையாய் தோன்றியதே...
மனமொன்ற அருளொன்ற அரனும் உள் ஒன்ற
அற்புதமாய் ஆலயமும் அரிதழகாய் வடித்தவுடன்..
பரஞ்சோதி கோவிலுக்கு பெருஞ்சாந்தி நாள் குறிப்பார்..

அந்நாளில் ஒரு மன்னன் எடுத்த பெரு ஆலயமும் நிறைவுபெற..
நின்மலனும் அவன் கனவில் செப்பிடுவார் தப்பாமல்..
"என் ஆளால் செய்த பெருங்கோயில்..
யான் புகு நாள் இது என்ன.. "

மன்னவனும் அக்கணமே அடியாரின் இடம் சேர்ந்து, குணக்குன்றாய்
நின்றவரின் மனக்கோயில் காண்கின்றார்.. வானோரும்,
ஏனோரும் மலர்மாரி பொழிகின்றார்.. மாறும் மனம் கொண்டு
தேறும் வகை சொன்ன நேசமிகு பூசலார் திருவடிகள் போற்றி! போற்றி!

பூசலார் நாயனார் குருபூசை: துலை நல்லோரை ஐப்பசித் திங்கள் பனை நாண்மீன் (அனுசம்)

திருச்சிற்றம்பலம்

# சிவபூமியில் சிவனைத் தேடி - மட்டுநகர் எருவில் சிவன் கோயில்



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு



ஈழத்தின் பழமையான சிவன் கோயில்களை பழமை மாறாமல் திருத்தி வடிவமைக்க சிவபூமி சிவனடியார்கள் முன்வரவேண்டும்.

திருமூலனார் இலங்கையைச் சிவபூமி என்று ஒப்புவித்தமைக்கு ஏற்றால் போல் ஈழத்தின் பல பாகங்களிலும் சிவ வழிபாட்டின் எச்சமிச்சங்கள் முழுமையான சிவாலயங்களாகவும், இறந்த நிலைக்குட்பட்ட சிவாலயங்களாகவும் அருளாட்சியும் காட்சியும் தந்துகொண்டிருக்கும் சூழ்நிலையில், தென்னாட்டு பத்திரிகையின் சிவபூமியில் சிவனைத்தேடி என்ற கட்டுரையின் வாயிலாக, ஈழத்தில் முற்றாகத் தன் இருப்பை இழந்து, மீண்டும் புத்துயிர் பெற்று வரும் வரலாற்றுச் சிறப்பு மிக்க சிவாலயமாக மட்டுநகர் எருவில் சிவனார் ஆலயம் விளங்குகிறது.

### தலவூரின் வரலாறு

மட்டக்களப்பின் எழுவான் கரையையும் படுவான் கரையையும் இணைக்கும் ஓர் சில ஊர்களில் எருவிலும் ஒன்று. ஆம்பல், அல்லி, தாமரை போன்ற நீர்மலர்கள் நிறைந்த குளம், இத்தி, மருதம், வம்மி, கொக்கட்டி முதலிய அரிய மரங்கள், நாணற்புற்கள் நிறைந்த இயற்கை எழில் மிகுந்த சூழலாலும், கமத்தொழிலாலும், கிராமியக்கலைகளாலும், தமிழர் பண்பாட்டு சடங்குகளையும், நம்பிக்கைகளையும் பண்டு தொட்டு பயில் நிலையில், வளம் பெற்று வரும் கிராமமாக எருவில் விளங்குகிறது.

இவ்வூரின் சரித்திரம் பற்றிய குறிப்புக்கு மகாவம்சம், அதன் உரை நூலான வம்சத்தப்பகாசினி எனும் பாளி இலக்கியத்திலும், மட்டக்களப்பு ஒல்லாந்தர், பிரித்தானியரின் காகித ஆவணங்களிலும், கண்ணகிவழக்குரை, மட்டக்களப்பின் வரலாறு பற்றி எழுதப்பட்ட அனேக சரித்திர நூல்களிலும் காணக்கூடியதாக உள்ளது. மகாவம்ச குறிப்பின் படி இவ்வூர் 'ஏரகாவில்ல' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் இவ்வூரின் பெருமையை தற்காலத்தில் வாழும் கவிஞரொருவரும் " ஏரகாவில் ஈசுவரனார் எங்கள் எருவில் சிவனாராம் " என்று பாடிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பை ஒல்லாந்தர் கைப்பற்றிய காலத்தில், மட்டக்கப்பின் ஏழு வன்னிமைப் பகுதியில் மிகச்சிறிய அலகாக எருவில் பகுதி விளங்கியுள்ளது. ஒல்லாந்தர் மட்டக்களப்பை கல்லாறு, சம்மாந்துறை, அக்கரைப்பற்று என்று மூன்று திசாவைப் பிரிவுகளாக பிரித்து, தங்களுக்கு சார்பான பண்ராட வன்னியர்களை நியமித்தனர். அவற்றுள் கல்லாறு திசாவையில் ஏறாவூர், மண்முனை, எருவில், போரதீவு என்று நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டு இருந்தது. அக்காலத்தில் இப்பகுதிகளில் புகழ் பெற்ற சிவாலயங்களும், கந்தன், கணபதி, கண்ணகி, காளி முதலிய தெய்வங்களுக்கும் கோயில்கள் அமைந்திருந்தன. போரதீவில் சிவனுக்கு கோயில் இருந்தமையால் அவ்வூர் 'கோயில்போரதீவு' என்று அழைக்கப்பட்டிருந்தது. தற்காலத்தில் அத்தகைய கோயிலை கண்டுகொள்ள முடியாதுள்ளது.

இதேபோல் எருவிலிலும் பண்டைய காலத்தில் ஒரு சிவன் கோயில் அமைந்திருந்தது. அவ் ஆலயத்தை மகாசேனன் எனும் பௌத்த மன்னன் அழித்தான் என்று மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இதற்கேற்றால் போல் இவ்வூரில் அதன் எச்சம் சிவனார் மடுவாக இன்றும் இப்பிரதேசத்தவரால் அழைக்கப்பட்டு வருகின்றது. அவ்விடம் தீர்த்த கேணியாக இருந்திருக்க வாய்ப்பிருக்கின்றது. வாக்கிய பஞ்சாங்கம் ஈழத்தில் நடைமுறைக்கு வந்த காலம் முதல் அப்பஞ்சாங்கத்தில் எருவில் நகர் ' சிவனார்மடு சிவன் தேர் ' என்று குறிப்பிட்டு இருப்பதிலிருந்தும், இக்கோயிலின் பண்டைய இருப்பை தெளிவுபடுத்திக் கொள்ளமுடிகின்றது. தற்போது இவ்விடத்தில் விநாயகர் ஆலயம் ஒன்று அமைந்திருக்கின்றது. அவ்வாலயமும் ஏறத்தாழ 300 வருடங்கள் பழமையானது என்கின்றனர்.



இலங்கையின் ஆரியச்சக்கரவர்த்திகளின் ஐந்தாம் செகராசசேகரனுடைய காலத்தில் இயற்றப்பட்ட கண்ணகிவழக்குரை என்ற நூலில் எருவிலில் இருப்புக்கொண்ட கண்ணகிக் கோயிலைப் பற்றிய குறிப்புள்ளது. இக் கோயிலுக்கு மூத்த கோயிலாகவே எருவில் சிவன் கோயில் இருப்பு கொண்டது என்பது தெளிவாகின்றது.

### திருத்தல வரலாறு

இத்தலத்தின் வரலாறு பற்றிய குறிப்புக்கள் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் எழுதிய ஈழத்து இந்து சமய வரலாறு என்ற நூலிலும், பேராசிரியர் சி.பத்மநாதன் எழுதிய இலங்கையின் இந்து சமயம் என்ற நூலிலும் காணக்கூடியதாக உள்ளது.

ஈழத்து இந்து சமய வரலாறு எனும் நூலில் "சிவவணக்கத்துக்குரிய தலங்களான திருக்கோணேச்சரம், பூசகர் கலந்தன் ஊரிலுள்ள ஆலயம், ஏரகாவில்லவில் உள்ள ஆலயம் ஆகியவற்றை மகாசேனன் அழித்தது பற்றி மகாவம்சத்தின் உரை நூலாகிய வம்சத்தப்பகாசியினியில் தகவல் உண்டு" என்ற செய்தியின் படி, எருவிலில் இருப்புக்கொண்ட சிவாலயமே ஏரகாவில்லவில் உள்ள ஆலயம் என்ற தகவல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் இந்து சமயம் என்ற நூலின் "அரசன் 'மணிகீரம்' என்னும் விகாரையைக் கட்டினான். தேவாலயங்களை அழித்து விட்டு மூன்று விகாரைகளை அமைப்பித்தான். கோகர்ணத்தில் 'கோகர்ண' விகாரையினையும், ஏரகாவில்ல என்னுமிடத்தில் 'மிககாம' விகாரையையும், கலந்த என்னும் பூசகருடைய ஊரிலே 'கங்காசேன பர்வதம்' என்னும் விகாரையையும் அமைப்பித்தான்." என்று குறிப்பிடுவதிலிருந்தும், ஈழத்தின் கிழக்குகரையோரப் பிரதேசங்களில் வாழ்ந்த குடிகளில் பெருமளவானோர் சைவராக இருந்துள்ளனர். கிழக்குக் கரையில் மகாசேனன் அழிப்பதற்கு முன்பு மூன்று சிவாலயங்கள் இருந்துள்ளன என்பது உறுதியாகிறது. மகாசேனனின் காலம் 277 முதல் 304 வரையானது. எனவே இவனுடைய காலத்திற்கு முந்திய சிவாலயங்களாகவே அவை விளங்கியுள்ளன. அத்தகைய சிவாலயங்களுள் ஏரகாவில்ல என்னுமிடத்தில் உள்ள சிவாலயமும் ஒன்றாகும்.

இங்கு 'ஏரகாவில்ல' என்பது எருவில் என்ற பெயரில் பாளி வடிவம் போல் உள்ளது, என பேராசிரியர் சி.பத்மநாதன் குறிப்பிடுகின்றார். மேலும் அவர் குறிப்பிடுகையில், அவ்வாறாயின் அது மட்டக்களப்பிலுள்ள எருவில் போரதீவு என்னும் பகுதியைச் சேர்ந்த தலமென்று கொள்ளலாம். அங்குள்ள கிராமம் ஒன்று பூசகர் ஒருவரின் உடைமையாக இருந்தமையையும், அக்கிராமத்தில் சிவாலயம் ஒன்று அமைந்திருந்தமையும் குறிப்பிடக்குரியது என்று கூறுகின்றார். இருப்பினும் இதுவரைக்கும் இச்சிவாலயத்தின் தொல்பொருட் சின்னங்களோ, வரலாற்று ரீதியான அணுகுமுறை தழுவிய ஆய்வுகளோ கிட்டவுமில்லை, நடைபெறவும் இல்லை. ஆனால் இப்பிரதேச மக்களிடையே இச்சிவாலயம் பற்றிய வரலாற்றுக்கதைகளும், மூர்த்தியின் அற்புதக்கதைகளும் வாழையடி வாழையாக வாய்மொழிக்கதைகளாக, இன்று வரை பேசப்பட்டு வருகின்றதை செவிமடுக்க முடிகின்றது.

### கோயில் பூசைகளும் சிறப்புகளும்

ஏரகாவில் சிவன் ஆலயத்தின் எச்சமாக எருவில் பாரதிபுரத்தில் தொடக்க காலத்தில் சுடலையின் அருகாமையில் பைரவர் வழிபாடு, சூலவழிபாடு இயற்றி வந்ததாக இத்தலைமுறையின் மூதாதையர்கள் செப்புகின்றனர். தற்போது அவ்விடத்தில் சிவலிங்கத்தை மூர்த்தியாகக் கொண்டும் மகாளயபட்ச மறைமதி நாளினை (அமாவாசையை) தீர்த்த நாளாக கொண்டு ஒரு சிவாலயம் உற்பத்தியாகியுள்ளது. அச் சிவாலயத்தில் நித்திய பூசை, சுக்கிரவாரப்பூசை, வருடாந்த திருவிழா, ஆடி மறைமதி (அமாவாசை) , சிவனிரவு, திருவாதிரை, திருவெம்பாவை பாடுதல், தமிழர் பண்டிகைகள் என்பனவும் சிறப்பாக கடைப்பிடிக்கப்பட்டும் வருகின்றன. மற்றும், மட்டுதேசத் திற்குரிய வீரசைவ மரபு நம்பிக்கைகளும், தேசத்துக்கோயில் மரபுகளையும் இக்கோயில் வழமைகளிலும் காணக்கூடியதாக உள்ளது. இச்சிவன்கோயில் பூசை மண்முனை தென்



எருவில்பற்று பிரதேசத்திற்குட்பட்ட 15 கிராமங்களுக்கும் உரித்துடையது என்ற தேசத்து கோயில் சட்டம் இக்கோயில் யாப்பிலும் வரையப்பட்டு இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இக்கோயிலின் மூர்த்தியின் அருளாற்றலால் அற்புதங்கள் நடைபெற்று வருவதாக இப்பிரதேச மக்கள் பத்தி கொண்ட உணர்வால் கூறுகின்றனர். இப்பிரதேச கவிஞர்கள் பலராலும் இக்கோயிலின் சிறப்பு, பத்தி பாமாலையாகக் புனையப் பட்டுள்ளது.

**"சிவனெனும் நாமம் தனக்கேயுரிய செம்மேனி எம்மான்"**
**- அப்பர் தேவாரம்**

# தவத்தினாற் பெறும் பயன்



சிவத்திரு
யாழவன்
சிவவேதன்



மங்களநாதர் - உத்தரகோசமங்கை

தவம் என்ற ஒற்றை வார்த்தை சைவத்தமிழ் உலகின் மாபெரும் ஆன்மீக அலை எனலாம். இத்தகு தவம் என்றால் என்ன என்று வினவும் போது உலகிடை ஒரே ஒரு விடை மட்டும் பரந்து ஒலிக்கின்றது. காவி பூண்டு, கமண்டலம் தூக்கி காட்டிற்கு செல்லுதலே தவம் என்று உலகு இயம்புகின்றது. ஆனால் அஃது இல்லை தவம். மந்திரம் கூறலே தவம் என்று இன்னோர் பகுதி கூறுகின்றது. ஆனால் அதுவும் இல்லை தவம். அப்படி என்றால் அந்த தவம் யாது? தவம் என்று கூறுவதன் பொருள் யாது என்று வினவின் அதற்கான அர்த்தத்தை அன்று வள்ளுவரே கூறி விட்டார்.

**“உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு”**

எமக்கு வரும் துன்பங்களை தாங்கிக்கொள்ளல் என்று முதலாவதாக அறுதியிடுகின்றார். அது என்ன எமக்கு வரும் துன்பங்களை தாங்கிக்கொள்ளல் என்று ஓர் கேள்வி எழுப்பின், பின்வருமாறு ஒரு பதில் அமைகின்றது. துன்பங்கள் பலவகை பசி ஓர் துன்பம், பணம் ஓர் துன்பம், நோய் ஓர் துன்பம், தோல்வி ஓர் துன்பம். இவ்வாறு சொல்லிவிட்டு அடுத்த வரியை, பிற உயிர்களுக்கு தீமை செய்யாமை என்று சொல்லுகின்றார். இதைத்தான்

**“அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே”**

என்று அன்பில் ஈசனை அறுதியிடுகின்றார் திருமூலர். இதைத்தான் வள்ளுவனும் சொன்னான், பிற உயிர்களுக்கு தீங்கு பயக்காமை என்ற வடிவில். இந்த இரண்டுமே தவத்திற்கு உரு என்கிறான் மூத்த முதல்வன் வள்ளுவன். சரி தவத்திற்கு உரு கூறியாயிற்று தவத்தை யார் செய்யலாம்? இந்த கேள்விக்கும் வள்ளுவன் சொல்லிச்செல்கின்றான்.

**“தவம் தவமுடையார்க்கு ஆகும் அவம்அதனை
அஃதிலார் மேற்கொள் வது”**

நற்குணங்கள் உடையவற்கே தவம் செய்வது இலகுவாகும். அல்லாதவர்கள் தவம் செய்வது வீண் வேலை என்கிறார். இது ஞானவெடிப்பின் முதிர்வு என்றும் கொள்ளலாம். சரி நற்குணங்கள் என்றால் எவை? அறம், உண்மை, நேர்மை, கொடை என்று அந்தப்பட்டியல் நீண்டு செல்கின்றது. இதைக்குறித்து தான் விபுலானந்தர் சில வரிகளை இயம்பிப்போகின்றார்.

**“வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது”**

என்ற பாடல் அதன் உள்ளார்ந்த அர்த்தங்களை தெளித்துப் போகின்றது. ஆழவிளங்கிப் புரிந்தால் இந்தப்பாடலை விட சிறந்த விளக்கம் இல்லை எனலாம். இறைவனுக்கு வெள்ளை நிற மல்லிகையும் வேண்டாம், வேறெந்த மாமலரும் வேண்டாம். அவன் வேண்டுவது உள்ளத்தையே என்று உறுதி பட உரைக்கின்றார். அந்த உள்ளம் எனும் இறைவன் விரும்பி உறையும் இடத்தை தூய்மைப்படுத்தும் பொருட்களே நற்குணங்கள், தூய்மையில்லாத இடத்தில் இறைவன் உறைய மாட்டான். ஆகவே உன் உள்ளத்தை தூய்மைப்படுத்து என்கிறார் விபுலானந்தர். அந்த தூய்மைப் படுத்தலே தவம் என்கின்றார் வள்ளுவர்.

**“தேனுக்குள் இன்பம் சிவப்போ கறுப்போ வானுக்குள் ஈசனைத் தேடும் மதியிலீர்! தேனுக்குள் இன்பம் செறிந்திருந் தாற்போல் ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே”**

எனும் திரு மூலனின் வார்த்தை உதிர்ப்புக்களும் இவற்றையே சொல்லிப்போகின்றன. இறைவனை உள்ளத்தில் தேடு, அவன் உறைவதற்கு நற்குணங்களால் உள்ளத்தை தூய்மைப்படுத்து, அதன் பெயரே தவம். சரி தவத்தின் பயன் என்ன என்றால் அதற்கும் வள்ளுவனே பதில் உரைக்கின்றார்.

**“ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும்”**

கெடுதல் செய்யும் பகைவரை தண்டித்தலும், நல்ல நண்பர்களை காத்தலும் தவத்தின் வலிமை என்றே வள்ளுவர் உரைக்கின்றார். அது என்ன தீயவர்களை அழித்து நண்பர்களை காத்தல், எண்ணிப்பார்த்தால் ஆழப்பொருள் தரும் வார்த்தை அது. உள்ளத்தை நல்ல குணங்களால் தூய்மைப்படுத்தி விட்டோம், அதில் இறைவன் உறைந்து விட்டான். சரி இறைவன் உறைந்தால் என்ன நடக்கும்? அவனே எம்மை காப்பான். தேவையற்றவற்றில் இருந்து எம்மை நீக்கி எமக்கு நல்லருள் புரிவான். இதனால் தான் தவம் நண்பர்களை காக்கும் பகைவர்களை அழிக்கும் என்றான் வள்ளுவன்.

**“ஈசனே என் எம்மானே எந்தை பெருமான் என்பிறவி நாசனே நான் யாதுமொன்று அல்லாப் பொல்லா நாயான நீச னேனை ஆண்டாய்க்கு நினைக்க மாட்டேன் கண்டாயே தேச னேஅம் பலவனே செய்வ தொன்றும் அறியேனே”**

என்று திருவாசகம் சொல்லிய மாணிக்கவாசகரும் இதையே சொல்லிப்போகின்றார். உன்னை நினைக்காத என்னை ஆண்டு அருளிய என் இறைவனே என்று புலம்புகின்றார். ஆக தவம் என்பது செய்தலின் சிறப்பு, ஒழுக்கத்தின் உருவம், இறைவனை அடைய தவம் ஒன்றே போதும் அந்தத் தவத்தை ஒழுக்கத்தால் அடையலாம் என்பது தெளிந்த சிறப்பு. சரி அவ்வாறு இறைவனை தவத்தின் மூலம் பற்றி வைத்தலின் சிறப்பு என்ன? அதற்கும் வள்ளுவர் பதில் வழங்கிப்போகின்றார்.

**“பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்”**

பிறவி எனும் பெருங்கடலை அடைய இறைவனின் அடியை பற்ற வேண்டும். இறைவனின் அடியைப்பற்ற உள்ளம் சுத்தமாக வேண்டும். உள்ளம் சுத்தமாக நற்குணங்களை வளர்க்க வேண்டும். நற்குணங்களை வளர்ப்பதன் பெயர் தவம். ஆக முத்தியின் இலக்கு வழிகாட்டி தவமே என்று சைவம் உரைக்கின்றது.

**“ஓர் பிடி நீறும் இல்லா வாழ்வை நம்பும் அடியேனை இனி ஆளுமே”**

என்பது பட்டினத்தார் வார்த்தை. நிலையாப்பொருள்களில் வாழ்வை வெறுத்த சைவத்தமிழன் கண்டு பிடித்த நிலைத்த பொருளே இறைவன் அவனை அடையும் இலகுவான நிலைத்த வழியே தவம்.

**“செய்க தவம்! செய்க தவம்! நெஞ்சே! தவம் செய்தால் எய்த விரும்பியதை எய்தலாம் - வையகத்தில் அன்பிற் சிறந்த தவமில்லை, அன்புடையார் இன்புற்று வாழ்தல் இயல்பு”**

என்று தமிழ்ப்புலவோன் பாரதியும் இதையே சொன்னான். தன் நெஞ்சாகிய ஆழ்மனதிடம் சொன்னான், ‘நெஞ்சே செய் தவத்தை, தவம் செய்தால் விரும்பிய எதனையும் அடையலாம்.’ என்று சொல்லிவிட்டு சொன்னான், இந்த வையகத்தில் அன்பில் சிறந்த தவம் ஏதுமில்லை. அத்தகு சிறந்த தவமாகிய அன்பினை உடையவர்கள் இன்புற்று வாழ்வது இயல்பானது. இது பாரதி கண்ட தவநெறி. சரி தவத்தின் சிறப்பு எனும் கேள்விக்கு பின்வரும் பாடல் பதிலறைந்து போகின்றது.

**“வான்முகில் வளாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்”**

இந்த சைவப்பெரும் வாழ்த்து, தவநிலையை ஒரே சொல்லில் அடக்கிப்போகின்றது. வானத்திலுள்ள முகில்கள் காலம் தவறாது மழையாய் பொழிய வேண்டும். இவ்வாறு பெய்து, விவசாயம் உட்பட அனைத்து வளங்களும் சிறந்தோங்க வேண்டும். மன்னன் அறக்கோல் தவறாது கோன் முறையில் அரசாள வேண்டும். இந்த உலகில் உள்ள அனைத்து உயிர்களும் நெகிழ்ந்து, எந்தவொரு குறையும் இல்லாது வாழ வேண்டும். நான்மறைகள் மற்றும் தீந்தமிழில் அமைந்த திருமுறைகள் எனும் அறங்கள் ஓங்குதல் வேண்டும் என்று சொல்லிவிட்டு, நற்றவம் மற்றும் வேள்வி என்பன சிறக்க இவற்றை எல்லாம் கொண்ட மேன்மை மிகு சைவ நீதி இந்த உலகெங்கும் ஒலிக்க என்று இப்பாடல் நிறைகின்றது.

அது என்ன நற்றவம் மற்றும் வேள்வி என்று தெளிந்தால், சைவ முறையில் மனதை இறைநிலைப்படுத்துவது தவம். உடலை இறைநிலைப்படுத்துவது வேள்வி. இத்தகு இரண்டும் சிறந்தோங்கல் வேண்டும் என்று விழிக்கின்றது இந்தத்தீந்தமிழ்ப்பா! உணர்ந்து மனதால் அடைவதே செந்தவம். இத்தகு தவச்சிறப்பை தன் ஊன் உருக்கும் செழுந்தமிழால் உலகிற்கு உரைத்துப்போகின்றார் வாதவூரடிகள் என்று அழையப்பெற்ற எம் மாணிக்கவாசகர்.

**“முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே”**

முத்தி எனும் பெருந்தவநெறி அறியாத மத மூர்க்கர்களோடு, அவர்கள் வழி நடக்கவிருந்த எனக்கு உண்மையான பத்தி நெறியை அறிவித்து, என்னுடைய வினைகள், தவறுகள் எல்லாம் தகரும் வண்ணம் செய்து, என்னுடைய மலங்களை அழித்து, என்னையும் சிவம் ஆக்கிய



என் தந்தையே நீ எனக்கு அருளிய இந்த தவநெறியை யார் பெறுவார். யாரால் பெற முடியும் என்று வியக்கின்றார். இசை சேர இந்தப்பாடலை நோக்கின், இது ஓர் சிறந்த பாடல். செழித்த பாடல். என்று இயம்பலாம். ஆனால் அதன் பொருள் உணர்ந்து பார்க்கும் போது தான் அதன் ஆழம் புரியும். உனது கடவுள், எனது கடவுள், அவன் கடவுள், இவன் கடவுள், கடவுள் உண்டு, கடவுள் இல்லை என்று எல்லாரும் மூர்க்கர்கள் போல் சண்டை இடுக்கின்றார்களே தவிர, உண்மையில் யாரும் முத்தி தரும் தவநெறியை நோக்கி செல்கின்றார்கள் இல்லை. நானும் அவர்களை போல் செல்ல நினைத்தேன். ஆனால் நீ அத்தகு தவநெறியை அறிவித்து, என்னுடைய வினைகள் எல்லாவற்றையும் அழித்துவிட்டாய். என்னுடைய மலங்களை அழித்து, என்னை சிவமாக்கிய ஈசனே. இப்படி ஒரு வரத்தை வேறு யாரும் பெற்றனரோ என்று வியக்கின்றார். இது தான் தவத்தின் நெறி, ஆகவே மணிவாசகரின் வார்த்தைக்கு இணங்க நாமும் எம்மனதை தவத்துடன் ஆழப்பின்னி இறைவனை அடைவோம்!

**“நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்”**

**திருச்சிற்றம்பலம்**

# தென்னாட்டு நிகழ்வுகள்




நம்பியாண்டார் நம்பி குருபூசை



தெய்வச் சேக்கிழார் குருபூசை




தவமுதல்வர் சம்பந்தர் குருபூசை




தென்னாடு வெளியீடு - மன்னார்




தென்னாடு வெளியீடு - களுதாவளை





தென்னாடு ஐம்பூதநாதர் கடவுள் நீராட்டு தின சங்குநீராட்டு மற்றும் தென்னாடு செய்தியிதழ் வெளியீடும் - (24-05-2021 வளர்பிறை பதின்மும்மைப் பிறைநாள்)

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் ஒன்பதாவது திங்கள் செய்தியிதழ் "தென்னாடு", சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு வண்பண்ணை தயா அச்சகத்தில் அச்சிடப்பட்டு ஆடவை நல்லோரை ஆனித் திங்கள் 10ம் நாள் நிறைமதி அன்று (24-06-2021 வியாழக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம்.

தொடர்பு: குளங்கரை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் , யாழ்ப்பாணம். தொலைபேசி +94 21 221 2739 | மின்னஞ்சல் thennavan@thennadu.org